
அணி - 01
ஒலி - 08,09,10
silampumagazine@gmail.com
+94 76 538 3995 / +94 76 258 3587
பங்குனி - சித்திரை - வைகாசி - 2021
வள்ளுவர் ஆண்டு - 2052
சிலம்பு
பல்சுவை இணைய இதழ்
www.silampu.com
www.silampu.com/magazine/
60
புத்தகங்கள் மீது
கொண்ட காதல்
என்னை எழுதத்
தூண்டியது...
அறிவியல் - அரசியல் - ஆன்மீகம் - இலக்கியம் - சினிமா

சிலம்பு
பல்சுவை இணைய இதழ்
silampumagazine@gmail.com
+94 76 538 3995 / +94 76 258 3587
www.magazine.silampu.com / www.silampu.com
வெளியீடு : அருள்ஒளி கிரியேசன்ஸ் பிறைவேட் லிமிரெட்

www.silampu.com/magazine/

## மூன்று இதழ்களுக்குமாய்...

இம்முறை மூன்று இதழ்களை ஒரே இதழாய் வெளியிட வேண்டிய சூழலில் சிலம்பு பல்சுவை இணைய இதழ் வெளிவருகிறது.

இயந்திரம் மனிதனை இயக்குகின்ற காலமல்லவா? இது. அதன்பால் கோளாறுகளுக்கும் குறைவில்லை. இருந்தும் இந்த மாதத்தில் கோளாறு நிவர்த்தியானமைக்கு தொழில்நுட்பத்திற்கு பாரிய நன்றி ஒன்றினை தெரிவித்துக் கொள்வது அவசியம்.

மேலும் சிலம்பு இதழில் வெளிவரும் தகவல்களை வாசகர்கள் வாசித்து பயனடைவார்கள் என்ற சமூகப் பொறுப்பில் இவ் இதழையேனும் விரைவாக வெளியிட வேண்டும் என்ற அவாவுடன் உங்களுடன் சங்கமிக்கின்றோம்.

இம்முறை வெளிவரும் இதழில் கடந்த மூன்று இதழ் களையும் ஏற்பீர்களாக! தொடர்ந்தும் தங்களது மேலான ஆதரவுகளைத் தருவீர்களாக!

சிலம்பின் ஒலி தொடர்ந்தும் ஒலிக்க வாசகர்கள் ஆகிய உங்களது பிரார்த்தனைகளையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

மேலும் பெருகிவரும் கொரோனா தொற்றிலிருந்து நம்மையும் நாம் சார்ந்த மக்களையும் பாதுகாக்கின்ற பாரிய பொறுப்பில் நாம் உள்ளோம் என்பதனை எக்கணமும் மறவாதீர்கள். பெருந்தொற்றால் ஏற்படும் அனர்த்தங்களை நமது முன்னேற்பாடான நடவடிக்கைகள் மூலம் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

“வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்”

எனும் வள்ளுவர் பெருந்தகையின் வாய் மொழிக்கிணங்க வருமுன் காப்போம். சுகாதார பிரிவினரால் தரப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின்பற்றி வாழ்வோம்.

நீண்டதொரு தனிமைப்படுத்தலை அனுபவிக்கும் வாசகர்களே!

இவ்விதழ் உங்களுக்கு நல்ல பொழுது போக்கையும், பெறுமதியானவிடயங்களைஉள்வாங்கவும் பயன்படும் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்
இதழாசிரியர்

www.silampu.com

இராசலிங்கம் மதிகரன்
ஆசிரியர்




# மணிவிழா நாயகன்

# சொல்லில் அடங்கா செயல் வீரன்

இந்து சமுத்திர நித்திலத்திலே வடபால் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் தழைத் தோங்கும் இணுவையூரினிலே புதுப்புனல் ஆடிவருவது போல 1961ம் ஆண்டு வைகாசித்திங் களிலே 28 ம் நாள் இறையருளால் நாடி வந்தவரே செஞ்சொல் அரசு திரு. ஆறுதிருமுருகன் ஐயா அவர்கள்.

அவர்களுக்கு அகவை அறுபது, அறுபதிலே மணி விழா நாயகனாக மணிமகுடம் சூட அவரின் எண்ணங்களையும் செயல்களையும் பரந்துபட்ட நோக்கில் பார்க்கப் பட வேண்டிய அவசியம் இக் காலத்திலே தோன்றிற்று.


குடும்பத்தினருடன்

அந்த வகையிலே அன்பு நெறியில் நின்று ஆசிரியப் பணி, சைவப் பணி, செந்தமிழ் பணி, ஆலயப் பணி, சமூகப்பணி ஆகிய அரும்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



செல்வன்
ஆறுமுகம் திருமுருகன்

பணிகளை திறம்பட ஆற்றி வருபவரும் தொண்டின் திருவுருவமாக விளங்குபவரே செஞ்சொல் அரசு ஐயா அவர்கள்.



சிவபூமி முதியோர் இல்லத்திலிருந்து

நல்லை நாவலர் பெருமான் தொடங்கி வைத்த பிரசங்க மரபினை இன்றைய தலை முறையிலும் பேணி வருகின்றார். இனிய சொற்பொழிவாளராகத் திகழ்ந்து செந்தமிழ் பொழிகின்றார்.



தாய், தந்தை மற்றும்
சிவத்தமிழ்ச்செல்வி அவர்களுடன்

இவர்தம் சொற்பொழிவுகள் கேட்போரை மெய்மறக்கச்செய்து பெருமித உணர்வைத் தோற்றுவிக்கும்தன்மையின. அத்திறமை காரணமாக பல விருதுகளைத் தனகத்தே கொண்டுள்ளவர்.



கம்பன்விருது பெறும் போது

ஈழ நாட்டில் மட்டுமன்றி பல வெளிநாடுகளுக்குச் சென்றும் தம் நாவன்மையினூடாக சொற்பொழிவுகளை ஆற்றி வருபவர். இவர் சொற்பொழிவுகளை கேட்டு பயன்பெற்ற மக்கள் பலர் உளர்.

இவரைப் பின்பற்றி குருவாகப் போற்றியும் வாழும் பெரியார்கள் உலகமெங்கும் பரந்து காணப்

www.silampu.com


சிவபூமி அருங்காட்சி சாலை திறப்பு விழா


வீட்டு முற்றத்தில் யானையுடன்

படுகின்றனர்.

தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அறங்காவற் குழுவின் தலைவராய் விளங்குகின்ற செஞ்சொல் ஐயா அவர்கள் குழுவின் ஒத்துழைப்புடன் ஆற்றி வந்த பணிகளோ அதிகம். அந்த வகையில் சைவசமய வரலாற்றிலே புதிய சாதனையாளனாக அமையும் சிறப்புடையவர்.


ஆலயம் என்பது வழிபாட்டு தலம் மட்டுமன்றி அது மக்களின் வாழ்வின் சகல துறைகளுடனும் தொடர்பு கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதை எடுத்து காட்டுவது மட்டுமன்றி கதியற்றோருக்கு புகலிடமாகவும் ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் கருணை இல்லமாகவும் அமைய வேண்டும் என்கின்ற சிந்தனை வேரூன்றப் பெற்றவர் இவர்.


ஸ்தாபித்த நாவலருக்கு மாலை அணிவிக்கும் போது

இன்றைய காலத்தின் தேவைக் கேற்பவும் அன்றைய காலத்திலே திருமூலர் இலங்கை ஒரு சிவ பூமி என விளித்துக் கூறியதற்கு ஏற்ப அட்ட ஈச்சரங்கள்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



நாஸா வின் அப்பலோ
விண்வெளி ஓடத்துடன்

விளங்குகின்றன. இவர்தம் பெரு முயற்சியினால் யாழ்ப்பாண நாவற்குழி பகுதியிலே திருவாசக அரண்மனை எனும் ஆலயம் கட்டப்பட்டு பூஜை புனஸ்காரங்கம் செவ்வனே இடம் பெற்று வருவது கண்கூடு.

மேலும் சைவத்தின் தொன்மை களைப் பாதுகாக்கும்முகமாக அவ்வாலயத்திற்குமுன்பாக அருங்காட்சியகமும் அமையப் பெற்று பலரையும் ஈர்க்க செய்வதும் ஈடுபட செய்வதும் இவரது தனியாள் வினைத்திறனைகாட்டி நிற்கின்றது. இவ்வாறு இவரது சொல்லில் அடங்காச் சேவைகளை விவரித்து கொண்டே செல்லலாம்.

இவர் சைவ உலகின் தனிப் பெருந்தலைவனாகப் போற்றப் பட வேண்டிய சிறப்புக்கள் நிறைந்தவர். இவர் ஆற்றுகின்ற சைவசமய தமிழ் பணிகளையும் மனித நேய சமுதாயப் பணி களையும் நாமும் எமக்குப் பின் னருள்ள சந்ததியினரும் திரிகரண சுத்தியோடு நடைமுறைப்படுத் திப் பின்பற்றுவோமாக.



அன்னை
சிவத்தமிழ்ச்செல்வியுடன்

**மண்வினை நீர்தீர்க்கும்**
**வளிக்கும் வயதில்லை**
**ஒண்மைத் தமிழுக்கும்**
**வயதென் றொன்றில்லை**
**திண்டை மனத்தோடு**
**சீரார் திருமுருகன்**
**வண்மைத் தொண்டுக்கும்**
**வயதில்லை வாழியவே!**

**கவிஞர் வி.கந்தவனம்**



சிவபூமி கோசாலை

www.silampu.com

ஆக்கம் : பா.நூருல்லாஹ் முகவரி - 79, அம்பேத்கார் முதல் தெரு, மீனாம்பாள்புரம், மதுரை.



## சிறுகதை

# மரணத்தில் ஒரு பாதை

அடர்ந்த காட்டுப் பகுதிக்கு எவ்வாறு வந்தேன் என தெரியாமல் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த தருணத்தில் கால் தடுமாறி கீழே விழுந்தான் சுரேஷ் தன் உடல் முழுவதும் சேறும் சகதியும் இருப்பதைப் பார்த்து நீரோடை நோக்கி ஓடினான்.

வழியில் பாம்பும், பூச்சிகளும் இருப்பதை பார்த்து பயத்தில் நடுங்கிய படி ஒதுங்கி நின்றான். நான் நன்றாக மாட்டிக் கொண்டேன்.

எங்கு இருக்கின்றேன் என தெரியாமலும் வழி அறியாமலும் நின்று கொண்டிருந்த சுரேஷிற்கு கீழே தங்க சங்கிலி இருப்பதைப் பார்த்து அதிர்ந்து, அதை எடுக்கும் போது சங்கிலி கல்லில் மாட்டியிருப்பதை அறியாமல் இழுத்து எடுத்தவுடன் முதுகில் அடி விழுந்தவன் போல் கத்தி ஓடினான். ஓடினவன் ஒரு கிணறு இருப்பதைப் பார்த்து நின்றான்.

யார் என்னை அடித்தது? எதற்கு? என யோசித்தவன் கையில் இருந்த சங்கிலியை பார்த்தான்.

இது போன திருமணநாளிற்கு என் மனைவி கமலாவிற்கு நான் தந்தது, எப்படி இங்கு?. குழப்பத்தில் இருந்தவனுக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி.

கிணற்றின் அருகில் ஒரு பட்டு சேலை கிடந்தது. பச்சை நிறத்தில் மயில் தோகை வடிவம் பதித்த சேலை. இது! இது! கமலாவிற்கு நான் தந்த பரிசு.

அய்யோ! கமலா இங்க இருக்காளா, அவளும் வழி தெரியாம சுத் திக்கிட்டு இருப்பாளா, இங்க என்ன நடக்குது புரியவில்லையே! என கத்தி கதறி கமலா, கமலா என்று அழுதான்.

இந்த காட்டை விட்டு மொத வெளியே போனா என்ன நடந்துச்சுனு புரியும்,

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/

இப்ப அழுது எதுவும் நடக்காது. நம்ம சேறும் சகதியுமா இருக்கோம், இத சுத்தம் பன்னலாம்னு சுற்றி பார்த்தான்.

தண்ணீர் எடுக்க எதுவுமே இல்ல. "கிணறுக்குள் சின்ன சின்ன படிக் கட்டுகள் இருந்துச்சு."

இதுல இறங்கும் போது கீழே விழுந்துட்டா, அப்பாடி! நம்மளுக்கு நீச்சலும் தெரியாது.

என்ன பன்னலாம்னு யோசிக்கும் போது சேலைய அந்த மரத்துல கட்டி இறங்கலாம்னு யோசித்து அவ்வாறே செய்தான். சேலைய புடிச்சு இறங்கும் போது சேலை வராமமாட்டியிருந்தது.

இழுத்து இழுத்து ஒரு வழியா தண்ணிய தொடப்போகும் போது யாரோ மேலிருந்து தண்ணியை ஊத் துனதும் பயத்தில் சேலை கையை விட்டு போனது தெரியாம உள்ளே விழுந்து கத்தினான்.

"திடீரென ஒரு கை அவனை காப் பாற்ற வந்தது." கமலா! கமலா! வந் துட்டயா!. என்னய மேலே தூக்கு, தூக்கு, என கூறி மேலே வந்தவனுக்கு அடி மாறி மாறி விழுந்தது.

யோவ்! மனுசனா நீ, தூங்க விடு றயா?. ஓ கனவுக்கு அளவே இல்லையா, சேலைய உதறி விட்ட. கழுத் துல இருக்குற சங்கிலிய இழுத் துட்ட, அடிச்சாலும் அப்படியே படுத் துக்கிற.

தண்ணிய ஊத்துன பிறகு விழிக் கிற, தினதினம் சாகடிக்கிறயே, போ, பால் வாங்கிட்டு வா, கத்துன துல சூரியனே வந்துட்டா? நா அடுப் படிக்கு போறேன் என கூறி கமலா சென்றாள்.

நம்ம கனவுல கொஞ்சம் ரியால்டி வேற. அடி பிச்சுட்டா, பக்கத் து வீட்டு மீனாட்ட சொல்லி மானத்த வாங்குறது குள்ள அவ கால்ல விழுந்து மன்னிப்பு கேக்கலானு போறப்ப கால் தடுமாறி கீழே விழுந்தான் சுரேஷ். கனவு பார்த்த மாதிரி மீண்டுமா, அங்க மரணத்துல ஒரு பாத இருந்துச்சு, இங்க கம லாட்ட தப்பிக்கபாதையே கிடையாது என வேகமாக எழுந்தான்.

அறை கதவை திறக்கும் போது சங்கர் நின்று கொண்டிருந்தான். அப்பா! இராத்திரி என்ன கனவு, அம்மா அடிச்சாங்களா? மிதுச்சாங் களா? சொல்லுப்பா, நா ஸ்கூல்ல கத சொல்லனும்.

இப்ப நீ அடி வாங்க போற. ஓடிரு. பால் வாங்க கடை தெருவிற்கு வந் தான் சுரேஷ், சாலையோரம் ஒட்டப் பட்ட சினிமா போஸ்டரை பார்த்து

www.silampu.com

பிரம்மித்தான்.

மரணத்தில் ஒரு பாதை திரைப் படம், 20 கோடியில் ஒரு திகில் என ஒட்டடப்பட்டிருந்தது.

“நம்ம சொன்ன வந்தது” கனவுல பார்த்த காடு, கிணறு, என்ன இது, சுரேஷ் சார், என்ன போஸ்டர பாத் துட்டு நிக்கிறிங்க, வாங்க போக லாம், நேரமாகபோகுது, அப்புறம் சிஸ்டர்ட அடி வாங்க போறீங்க என எதிர் வீட்டு சந்திரன் சொல்லி சிரித்த படி சைக்கிளில் போனார்.

நம்ம கனவு ரொம்ம திகிலா போகுது. இதுவர இப்படி நடக்கல. இப்ப பே-ாஸ்டர்ல. வீட்டிற்கு வந்ததும் சங்கர் ஓடி வந்தான்.

அப்பா, போஸ்டர பாத்தயா, நீங்க கனவு பார்த்து சொன்ன கதை. எப் படா சொன்னேன்?.

நேத்துதா இந்த கனவு கண் டேன். இனிமே தான் சொல்லு வேன். அதுக்குள்ள எப்படி? என்றான் சுரேஷ்.

என்னது நேத்து பாத்த கனவா? திரும்பவுமா!. அப்பா இந்த கனவ நீ போன வருஷமே சொல்லிட்ட, அப்படியா! சரி, அது எப்புடி போஸ் டரா.

அதுவா பா, நா ஸ்கூல்ல சிவாட்ட நீ சொல்லுற கதைய சொல்லுவேன். சிவா அவுங்க அப்பாட்டசொல்லுவான்.

அவுங்க அப்பா சினிமா எடுக்குற கம்பெனி நடத்துறாங்க,

நாளைக்கு உங்கள சிவா அப்பா வீட்டுக்கு வர சொன்னாங்க, நம்ம போகலாமா எனகேட்டு நின்டான் சங்கர். சரி போகலாம்.

நம்ம கனவுக்கு ஒரு பாத கிடச் சுருக்கு. வாழ்க்கைக்கு தொடர் பாதயா இருக்கனும் என்று சாமி அறைக்கு சென்றான் சுரேஷ்.







www.silampu.com/magazine/
www.silampu.com



# மே 18 மறக்க முடியுமா?



எம்மை அறியாமலே எம் நாட்டில்
அடிமைகளாய் - கிளர்ந்தெழுந்தோம்
மறத்தமிழ் இனத்தின் விடுதலை
வேள்விக்கான தவிப்பு பல தசாப்தங்கள்

எத்தனை எத்தனை உயிர்
தியாகம் இருந்தும் எம் விடுதலை
கனவு துரோக தீயில் வீழ்ந்த சருகுகளாய்...

முள்ளிவாய்க்கால் - பல
வல்லரசுகளின் இரக்கமற்ற
ஆடுகளம் ஆனால் எம்மவரின்
பல கோடி கதை சுமந்து பல்லாயிரம்
உயிர் விதைத்து கண்ணீராலும்
குருதியினாலும் உறைந்து
கிடக்கும் பூமி அது

வேட்டுக்களில் சிதைந்து பல உடல்கள்
பசியில் துவண்டு பல உடல்கள்
வேதனை தாங்காது
இதயம் நின்று பல உடல்கள்
ஊரெங்கும் சனங்களின் அழுகுரல்
செங்கடலான நந்திகடலிலே
சிதைந்து சிதறிய துண்டங்களாய்
எம் உறவுகள் - ஒன்றும் அறியா
பச்சிளம் குழந்தை செய்துவிட்ட
பாவமென்ன தமிழனாய் பிறந்ததோ...?

அங்கே கண் துயிலும் உறவுகளுக்கு
அன்று மட்டுமே தீபங்கள் - ஆனால் எம்மவர்
மனதிலே என்றும் அணையாத
அனல் சுவாலை

மறக்க முடியுமா எம் இனத்தின் வலி...
மறந்து போவதற்கு அது ஒன்றும்
கீறல்கள் அல்ல ஆறா ரணத்தின் வடுக்கள்.

– சோபா

www.silampu.com/magazine/
www.silampu.com

# களம் கண்ட தேசத்தில் களமாடும் இலக்கியப் பெண் அபிவர்ணா



யாழ் வர்ணன்
ஊடகவியலாளர்

*“ஈழத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தம் முடிவுற்ற முல்லைத்தீவிலிருந்து யுத்த வலிகளயும் பெண்ணிய செயற்பாடுகளையும் தன் எழுத்துக்களால் உரமேற்றிடும் இளம் பெண் எழுத்தாளராக அபிவர்ணா முல்லை மண்ணில் வலம்வந்து கொண்டிருக்கிறாள்”*



மூங்கிலாறு வடக்கு உடையார் கட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவள். எனது தந்தை பெயர் நடராசா வினாயக மூர்த்தி. தாய் வினாயக மூர்த்தி மல்லிகா தேவி. எனக்கு இரண்டு தம்பி மார்கள் உள்ளார்கள். எனது ஆரம்பக்கல்வியை முல்லை உடையார்கட்டு மகாவித்தியாலத்திலும், புலமைப் பரீட்சையை முல்லை விஸ்வமடு மகா வித்தியாலயத்திலும் உயர்தர கல்வியை முல்லை உடையார் கட்டு மகாவித்தியாலயத்திலும் கற்றாள். தற்போது பகுதி நேர வகுப்புகளை நடாத்தி வருவதோடு அறநெறி ஆசிரியராகவும் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறாள். அவள் கவிதைத்துறை மட்டுமன்றி கட்டுரை, சிறுகதை, சுவரொட்டி, பாடலாக்கம், நாடகம், ஓவியம், அறிவிப்புத்துறை, மற்றும் புகைப்படமெடுத்தல் என பல் துறைகளில் சாதித்து வருகிறாள்.

மித்திரன், உதயன், விஜய், வலம்புரி போன்ற பத்திரிகைகளிலும் அவள் எழுதிய ஆக்கங்கள் வெளிவந்தன.

இதுவரை இரண்டு நூல்களை வெளியிட்டுள்ள அபிவர்ணா மூன்றாது தொகுப்பை வெளியிடுவதற்கான தயார் படுத்தலில் ஈடுபட்டுகிறாள்.

2015-தாரகைக் கீற்றுக்கள்(சிறுவர் கதை, 2018 - கவிதைத்தொகுப்பு (இரைதேடிய பறவைகள்) என இரு ஆக்கங்களை வெளியிட்டுள்ளாள்.

www.silampu.com/magazine/

www.silampu.com

## நூல் வெளியீடு தொடர்பில் அவளது நிலைப்பாடு




இன்றைய காலகட் டத்தில் குதிரைக் கொம்பாகவுள்ளது. வருமிடர் தாண்டி எழுதிக்கொண்டேயிருக்கின்றேன். பல தேடல்கள் இருக்கின்றன தேடல்கள் அனைத்தையும் படைப்புக்களாக்க வேண் டும் என்பதே எனது அவா.

தற்போதைய சூழ் நிலை யில் ஒரு படைப்பாளி தனது படைப்புக் களை வெளி உலகம் முன் கொண்டு வர வேண்டும் என்றால் அவற்றுக் காக செலவு செய்வதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது இது எனக்கு மட்டும் அல்ல எல்லோருக்குமான பிரச்சினை.


ஆனாலும் வறுமையில் பிறந்து எளிமை யாய் வாழ்ந்து கொண்டிருக்கும் என் போன்றவர்களுக்கு யாராவது உத விக் கரம் நீட்ட முன்வருவார்களானால் வறுமையிலும் செம்மையான படைப் புகளை படைக்க முடியும்.

## இலக்கிய துறையில் ஆர்வம் காட்ட ஊன்றுகோளாய் அமைந்த விடயங்கள்

சிறு வயது முதல் புத்தகங்கள் மீது ஏற்பட்ட காதல் என்னை இலக்கியத்து றையில் கால்பதிக்க தூண்டியது.

வீட்டில் அனைவருக்கும் வாசிப்பு பழக்கம் உண்டு. அவர்களிடமிருந்த வாசிப்புபழக்கம் என்னையும் வாசிக்க தூண்டியது.

சுயமாகச் சிந்தித்து எழுதும் பழக் கமும் தமிழ் மீது கொண்ட அளவிட முடியா பற்று என்னை இந்தளவிற்கு முன்னேறுவதற்கு ஊன்றுகோளாளய்




www.silampu.com/magazine/
www.silampu.com




இருந்தது.

எனது கவிநூலான “இரை தேடிய பறவைகள்” தொகுப்பில் மக்கள் அனுபவித்த வலிகள் தொடர்பாக எழுதியுள்ளேன். இதில் “மறவாது என்றும்....”- தலைப்பிலே

உயிரைக் காக்க ஓடிய கால்கள் கண்ணிவெடியில் காணாமல் போனது... கண்மணியை அள்ளி அணைக்கும் கரம் செல்வெடியில் சிதறிய நாட்கள்...

பசி வயிற்றை கிள்ளிய போது பார்க்கும் இடமெல்லாம் பிணக்குவியல்...

## நவீன யுகத்தில் பெண் படைப்பாளிகள்

நவீன யுகத்திலே பெண் அடிமைத் தனம் தொடர்ந்து செல்கின்றது.

வட்டத்தினுள் கோடு கீறி வாழ்க்கை நடத்தும் பெண்கள் பெரும்பாலும் பொது வெளிகளிலோ, சமூக வலைத் தளங்களி லோ தன் முகம் மறைத்து கண்ணாடிக் குப் பின் தமது அலங்காரங்களை இரசிப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

இதனால் இவர்கள் நாகரிகம் தெரியாதவர்கள், உலகத்தோடு ஒட்டி வாழப்பழகாதவர்கள்,படிப்பறிவற்றவர்கள், நவீன யுகத்தை விரும்பாதவர்கள் என தாமாகவே தப்புக்ககணக்கு போடுகின்றார்கள்.

ஆகவே பெண்களாள் எதையும் சாதிக்க முடியும் என உலகில் பல பெண்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தார் புவி பேணி வளர்த்திடும் ஈசன் மண்டுக்குள் சில மூடர் மாதர் அறிவை கெடுத்தார் என்ற பாரதியின் வாக்கிக்கு இனங்கள பெண்கள் சாதிக்கப் பிறந்த வர்கள் அவர்களது சாதனைகள் தொடர்ந்து கொண்டே செல்லும்.

www.silampu.com/magazine/
www.silampu.com

சி.விதுர்ஷன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# தென்னாசியாவில் சட்டவாட்சியை வலிமையாக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## அறிமுகம்

### இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வளர்ச்சிப்பாதை




தகவலறியும் உரிமை சட்டத்தின் அவசியம் 1994 ஆம் ஆண்டில் இலங்கையில் உணரப்பட்டது. இதனடிப்படையில் R.K.W. குணசேகர தலைமையில் அமைக்கப்பட்ட குழு தகவலறியும் சட்டத்திற்கான சிபாரிசுகளை முன்வைத்தது. இனைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டில் தகவலறியும் சுதந்திர சட்டமூல வரைபினை இலங்கை சட்ட ஆணைக்குழு சமர்ப்பித்தது. இந்த வரைபானது பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தாலும், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேயில்லை. தொடர்ந்து 1997 இலும், 2002 இலும் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முண்ணனி அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வுத் திட்ட வரைபுகளிலும் தகவலறியும் உரிமையானது, அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட்டிருந்தது.



2002 ஆம் ஆண்டில், தகவலறியும் சுதந்திர சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இரு கட்சிகள் சார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மேலும், ஊடகங்களும், சிவில் சமூக நிறுவனங்களும் அரசாங்கத்துடன் இணைந்து சட்டமூல வரைபுக்கும், வடிவமைப்புக்கும் உதவின. இந்த செயற்பாடு தகவலறியும் சட்டமூல வரைபுநகலிற்கு வழிகோலியதுடன், 2004 பெப்ரவரியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களால் தகவல் அறியும் சட்டமூல வரைவு அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இருப்பினும் பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பதற்கு முன் 2004 மார்ச் மாதம் பாரளுமன்றம் கலைந்தது. இதன் காரணமாக இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய அவர்கள் 2003 ஆம் ஆண்டின் தகவலறியும் சட்டமூல வரைபினை தனிநபர் பிரேரணையாக, பாராளுமன்றில் சமர்ப்பித்தார். ஆறு மாதங்களுக்குள், தகவலறியும் சட்டமூலமொன்றை அரசாங்கம் சமர்ப்பிக்க விருப்பதாக அப்போது ஆளும் கட்சிக் கொறடாவாக இருந்த தினேஷ் குணவர்தன தெரிவித்ததையடுத்து, கரு ஜயசூரிய, தமது சட்டமூலத்தை வாபஸ் பெற்றார். ஆனாலும் இது சார்ந்த சட்ட முயற்சிகள் எதுவும் முன்வைக்கப்படாமையால், 2011

www.silampu.com/magazine/
www.silampu.com
www.magazine.silampu.com
www.silampu.com

ஆம் ஆண்டு யூன் மாதத்தில் கரு ஜய சூரிய பாராளுமன்றத்தில் மீண்டும் சட்ட மூலத்தை முன்வைத்தார். எவ்வாறாயினும், அது அரசினால் தோற்கடிக்கப்பட்டது. 97 உறுப்பினர்கள் சட்ட மூலத்திற்கு எதிராகவும், 34 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித் தனர்.

இறுதியாக முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அவர்கள் தனது 100 நாள் வேலைத்திட்ட வாக்குறுதிகளில் ஒன்றாக தகவலறியும் சட்டத்தை இயற்றலைக் குறிப் பிட்டிருந்தார். இதன் பின்னணியில் 2015 ஏப்ரல் 28 ஆம் திகதி, 19 வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இதில் அரசியலமைப் பின் உறுப்புரை 14(அ) இல் தகவலறியும் உரி மையானது பிரஜைகளுக்கான அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. உறுப்புரை 14(அ) இன் கீழ், சட்டத்தினால் அளிக்கப்பட்டவாறே இந்த உரிமை அமுலாக் கப்படக் கூடியதாகும். எனவே, தகவலறியும் உரிமை சட்டம் இல்லாத நிலையில், தகவலறி யும் உரிமை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடு பயனற்றதாகவே இருந்தது.

எனவே தான் 2016 மார்ச் 4 இல், பாராளுமன்றத்தினால் தகவலறியும் உரி மைச் சட்டம் இயற்றப்பட்டதுடன், 2016 ஆகஸ்ட் 4 ஆம் திகதி சபாநாயகர் ஒப்ப மிட்டதன் மூலம் அது சட்டமாக மாறியது. அதன்பின் 2018ஆம் ஆண்டின் உலக தகவலறியும் உரிமைச் சட்ட தரவரிசை பட்டி யலில் இலங்கைக்கு 4ஆம் இடம் கிடைத்தது. இது இச் சட்டத்திற்கு கிடைத்த வெற்றி யாகும்.

## தகவலறியும் உரிமைச் சட்டமும் அதன் நோக்கமும்

தகவல் அறியும் உரிமையானது மக்களுக் கான அடிப்படை உரிமையாக பல்வேறு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும், 19ஆம் திருத்தச் சட்டத் திற்கு பின்னர், அரசியலமைப்பின் உறுப் புரை 14(அ) இன் மூலம் தவலை பெறுவதற் கான உரிமையானது ஓர் அடிப்படை உரிமை யாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தகவலறியும் உரிமைச் சட்டமும் இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப் பட்டுள்ளது. ஏதோ ஒருவகையில் ஒவ்வ வொருவரும் வரி செலுத்துபவர்கள் என்ற முறையில், அவர்கள் செலுத்தும் பணத்திற்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கு உரிமை இருக்கின்றது.

அதனால் தகவல் அறியும் உரிமையா னது நாட்டில் பணத்திற்கு என்ன நடக்கின்றது, அல்லது அப்பணம் எவ்வாறு செலவிடப்படு கின்றது, பிரதிபலன் எவ்வாறு அமை கின்றது போன்ற விடயங்கள் தொடர்பாக, அந் நாட்டின் பிரஜைக்கு விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கு கின்றது. தகவலறியும் உரிமையை உறுதிப் படுத்தப்படுத்துவதன் மூலம் பின்வரும் நோக் கங்களை அடையக்கூடியதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

✳ பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத் தன்மையை பேணலாம்.
✳ பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணி வளர்க்கலாம்
✳ மக்கள் ஊழலை எதிர்த்து நிற்கும் பொறிமுறையை தாபிக்கலாம்.

## 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டமும், முக்கிய அம்சங்களும்

இச்சட்டத்தின் பிரிவு 2இன் படி, தகவலறியும் சட்டத்தினை அமுல்படுத்தும் பொறுப்பு வெகு சன ஊடக அமைச்சிற்கு உரியதாகும். இச் சட்டத்தின் பிரிவு–3 இன் படி, பிரசை ஒவ்வொ ருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டு பாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டி ருக்க வேண்டும்.

இச் சட்டத்தினை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்த பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரிவு 7இன் படி, அமைச்சுகள், திணைக்களங்கள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி

www.silampu.com/magazine/

மன்றங்கள், அரசாங்கத்தினால் பொருளள வில் நிதியளிக்கப்படுகின்ற அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள், உயர்கல்வி நிறுவ னங்கள், நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் ஏனையவை தகவல் அணுகலை வழங்கக்கூடி யதாகவும்இ பதிவேடுகளை பராமரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அவர்கள் அனைத்து பதிவேடுகளையும் மின்னணு வடிவத்தில் பாதுகாக்க முயல வேண்டும்.

மேலும் பிரிவு 8 ஆனது, ஒரு விடயத் திற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர், ஒவ் வோர் ஆண்டும் முறையே யூன் 30 ஆந் திகதிக்கும் டிசெம்பர் 30 ஆந் திகதிக்கும் முன்னராக, ஆண்டுக்கு இரு தடவைகள் தமது அமைச்சுப் பற்றிய தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்தும் வண்ணம் அறிக்கை வெளியிட வேண்டும் என கூறப் படுகின்றது. பிரிவு 9 இன் படி, அரசானது ஏதே னும் செயற்றிட்டங்களை தொடங்குவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் அது பற்றி பொது மக்களிற்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் குறித்த செயற்றிட்டம் தனிநபர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருப்பின் அவர்களுக்கும் அது பற்றி தெரியப்படுத்துதல் வேண்டும்.

பிரிவு 11 ஆனது, தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படல் வேண்டும் எனவும் ஆணைக்குழுவானது, அரசியல மைப்புப் பேரவையின் விதப்புரைமீது சனா திபதியினால் நியமிக்கப்படும் ஐந்து(05) ஆட்களைக் கொண்டமைதல் வேண்டும். அரச நிறுவனம் ஒன்றிலிருந்து தகவல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை பற்றி இனி கவனம் செலுத்துவோம். தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாகவும், 14 வேலை நாட்களுக்கு மேற்படாமலும், கோரப்பட்ட தகவலை வழங்க அல்லது கோரிக்கையை நிராகரிக்க முடிவு செய்ய வேண்டும். கோரிக் கையானது நிராகரிக்க முடிவு செய்தால், கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கான கார ணத்தை தகவல் அலுவலர் கோரிக்கையை விடுத்த பிரசைக்கு அறிவிக்க வேண்டும். தக வலை வழங்க முடிவு செய்தால், அத்தகைய முடிபு எடுக்கப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள் குறித்த தகவல் பிரஜைக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

தகவலுக்கான கோரிக்கையானது, ஒரு பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந் திரத்துடன் சம்மந்தப்படுகின்றவிடத்து, அதற் கான பதிலளிப்பு கோரிக்கை கிடைக்கப் பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித் தியா லங்களுக்குள் செய்யப்படுதல் வேண் டும். பிரஜை ஒருவர் கோரும் தகவலா னது மூன்றாம் நபருடன் தொடர்புடைய தாக இருப்பின், தகவலை வழங்குவதா? வேண்டாமா? என்பது பற்றி 7 நாட்களுக்கு அறிவிக்கும் படி, தகவல் அலுவலர் மூன்றாம் நபரை கோருதல் வேண்டும். மூன்றாம் நபர்

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு
RIGHT TO INFORMATION COMMISSION OF SRI LANKA

தகவலை வழங்க சம்மதியாதுவிடின் தக வலை வழங்கக்கூடாது. மாறாக மூன்றாம் நபர் சம்மதித்தாலோ அல்லது பதில் தரா விட்டாலோ அத்தகவலை வழங்க வேண்டும்.

### தகவலை பெறுவதற்கான கடப்பாடு

ஒவ்வொரு பகிரங்க அதிகாரத்திற்கும் தக வலை பெறும் உரிமையை இயலச்செய்யும் வகையில் தகவலை முறையாக அடையாள குறியிட்டுப் பேணும் கடப்பாடு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது இருந்த பதிவேடுகளை பத்து வருடங் களுக்கு குறையாத காலப்பகுதிக்குப் பேணும் கடப்பாடு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஆக்கப்பட்ட பதிவேடுகளை அப்பதிவேடுகள் ஆக்கப் பட்டதில் இலிருந்து பன்னிரண்டு வருடங்களுக்கு குறையாத காலப் பகுதிக்குப் பேணும் கடப்பாடு உள்ளது. இச்சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டுள்ள விடயம் தொடர்பான பதிவேடு ஒன்றை அத்த கவல் கோரப்பட்டுள்ள காலப்பகுதியில் அல் லது அத்தகவல் தொடர்பான மேன்முறையீடு

www.silampu.com

செய்யப்பட்டுள்ள காலப்பகுதியில் அல்லது வழக்கு நடவடிக்கை உள்ள காலப்பகுதியில் அழித்தல் ஆகாது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தகவலுக்கான உரிமை ஆணைக்குழு என்பது தாபிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக் குழுவானது அரசியலமைப்பு பேரவையின் விதந் துரையின் மீது ஜனாதிபதியினால் நிய மிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் கடமைகள், இச்சட்டத்தின் கீழ் பகிரங்க அதி காரங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கடமை களுக்கு இணங்க அவைகள் செயற்படு கின்றனவா என்பதை கண்காணிப்பது மற் றும் இச்சட்டத்தின் கீழ் தகவல் வழங்குவதற் காக பகிரங்க அதிகாரிகளால் அறவிடப்படும் கட்டணங்களை தீர்மானிப்பதற்கான வழி காட்டுதல்களை வழங்குவது என்பவைகளை உள்ளடக்குகிறது. இந்த ஆணைக்குழு வின் தத்துவங்களானவை விசாரணைகளை செய்வது, ஒருவரின் உடைமையிலுள்ள தக வலை சமர்ப்பிக்குமாறு கோருவது, பகிரங்க அதிகாரத்திடமுள்ள தகவலை பரிசீலனை செய்வது, குறிப்பிட்ட வடிவத்தில் தகவலை வழங்குமாறு பகிரங்க அதிகாரமொன்றை நெறிப்படுத்துவது, பகிரங்க அதிகாரத்திட முள்ள தகவலை பிரசுரிக்குமாறு நெறிப்ப டுத்துவது மற்றும் மேன்முறையீடுகளை கேட்டு தீர்மானிப்பது என்பவைகளை உள் ளடக்கியுள்ளது.

## சிறுபான்மை மக்களின் உரிமை

இலங்கையில் இனப்பிரச்சினையானது தோற்றம் பெறுவதற்கான முக்கிய காரணி களில் ஒன்றாக சிறுபான்மை மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரபட்சங்களும் இருந்தது. ஆயினும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 12 ஆனது எந்தவொரு பிரஜையும் இனம், மதம் மொழி மற்றும் சாதி போன்ற காரணங்களுக் காக பாரபட்சங்களுக்கு உட்படலாகாது என்கி றது. இந்த அடிப்படை உரிமையானது சிறு பான்மை மக்களின் பாராபட்சங்களிலி ருந்து பாதுகாக்கின்ற முக்கிய சட்ட ஏற்பாடு களில் ஒன்றாக அரசியலமைப்பில் உள்ளது. அரசியலமைப்பில் உள்ள இந்த உரிமை யைப் பயன்படுத்தி அடிப்படை உரிமை மீறல் வழக்கிடுவதற்குப் பாரபட்சம் உள் ளதா என்பது பற்றிய தகவலை பெறுவது அவ சிய மாகின்றது. இவ்வகையில் தகவலுக் கான உரிமை சட்டமானது சிறுபான்மை மக்கள் தமக்கு எதிரான பாரபட்சம் உள்ளதா என அவர்களை அறிய இயலச்செய்வதால் சிறுபான்மை மக்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனால் அவர்களுக்கு உத் தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு உரிமையின் பாதுகாப்பை பெறக்கூடியதாக உள்ளது. இவ்வகையில் தகவல் அறியும் சட்டமானது நாட்டில் பாரபட்சத்தை இல்லாது




செய்வதற்கும், நல்லிணக்கத்திற்கும், சமா தானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வழி சய்கிறது எனலாம்.

## தகவல் வழங்க மறுக்கப்பட்டதற்கு எதிரான மேன்முறையீடுகள்.

தகவலுக்கான வேண்டுதல் மறுக்கப்பட் டமை, சட்டத்தினால் விலக்களிக்கப்பட்ட தகவல் என்ற அடிப்படையில் தகவல் மறுக் கப்பட்டமை, சட்டத்தால் விதிக்கப்பட்ட காலப்பகுதிகளை மீறியமை, முழுமையற்ற அல்லது பொய்யான தகவல் வழங்கப்பட் டமை, அதிகளவு கட்டணங்கள் விதிக்கப் பட்டமை, கோரப்பட்ட வடிவத்தில் தகவல் வழங்காமை அல்லது தகவல் பெறுவத னைத் தடுப்பதற்காக தகவலானது அழிக் கப்பட்டது அல்லது இடம்மாறி வைக்கப்பட்டது என நம்புவது போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட பிரஜை ஒருவர் அவ்வாறு மறுக்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



கப்பட்டதிலிருந்து அல்லது அது பற்றி அறிய வந்ததிலிருந்து 14 நாட்களுக்குள் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீட்டை செய்யலாம்.

அந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலரானவர் அந்த மேன்முறையீடு கிடைக்கப் பெற்றதில் இருந்து மூன்று வாரங்களுக்குள் அந்த மேன்முறையீடு தொடர்பான தனது தீர்மானத்தை எடுத்தல் வேண்டும். இந்த மேல்முறையீட்டில் அடுக்கப்பட்ட தீர்மானத்தால் அல்லது விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு தொடர்பான தீர்மானம் எடுக்கப்படாமல் பாதிக்கப்பட்டவர் இரண்டு மாத காலப்பகுதியினுள் தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அந்த ஆணைக்குழுவானது 30 நாட்களுக்குள் தனது தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஆணைக்குழுவின் தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட பிரஜை ஒருவர் அல்லது அதிகாரம் ஒன்று அத் தீர்மானத்திற்கு எதிராக ஒரு மாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

## கடந்தகால அனுபவமும் இவிமர்சனமும்

தகவல் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவானது தன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்கதான உயர்ந்த அளவு எண்ணிக்கையிலான மேன் முறையீடுகளை பதிவுசெய்துள்ளது. பெரும்பாலான வழக்குகளில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த மேன்முறையிடுகள் பெரும்பாலானவை சாதாரண பிரஜைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தவையாகும். ஆணைக்குழுவின் படி தகவல் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவை ஊடகங்களை விட சாதாரண மக்களே அதிகம் அனுபவிக்கின்றனர்.

சட்டத்தரணி பின்ரோ ஜெயவர்த்தன அவர்களின் கூற்றுப்படி பெரும்பாலான விண்ணப்பங்கள் தலைநகரிலிருந்து அல்லது பெரிய நகரங்களிலிருந்தோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள மக்கள் இச் சட்டத்தை பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். அவர்கள் ஒரு சட்டத்தைப் பற்றியும் அதனுடைய ஒழுங்குவிதிகள் பற்றியும் நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் ஆணைக் குழுவுக்கு முன்பாக தங்கள் கருத்துக்களை பணி தெரிவிக்கிறார்கள்.

இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் தகவல் உரிமைச் சட்டம் எல்லா வகையான தகவல்களையும் அனணுகுவதற்கான ஏற்பாட்டை வழங்கவில்லை. சட்டத்தின் பிரிவு 5 தகவலை வெளிப்படுத்துவதற்கான விதிவிலக்குகளை கொண்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த தகவலை வெளியிடுவதில் உருவாகும் தீங்கை விட பொதுநலன் மேலோங்கி நிற்குமானால் சட்டத்தின் பிரிவு 5(4) இன் கீழ் குறித்த தகவல் வெளியிடப்பட முடியும்.

தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பல நிகழ்வுகள் இடம் பெற்றதை கடந்த கால அனுபவத்தின் மூலம் சுட்டிக்காட்டலாம். அந்தவகையில் அமைச்சர்களின் வெளிநாட்டுப்பயணம் தொடர்பான தகவல்களை சிறப்புரிமை என்ற அடிப்படையின் கீழ் பாதுகாக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இங்கும் ஆணைக்குழு தீர்மானித்தாவது பொது நிதி பயன்படுத்தப்படும் போது தகவலை அனுகுவதற்கான உரிமையானது சிறப்புரிமை என்ற அடிப்படையை பயன்படுத்தி மறுக்கப்படமுடியாது. மாகாண சபையானது கூறப்பட்ட தகவலை வெளியிடுவதன் மூலம் தனது அலுவலக நடைமுறைக்கு எவ்வாறு எதிர்மறையான விளைவு ஏற்படும் என்பதை

www.silampu.com

விவரிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

அடுத்து 2018 ஆம் ஆண்டு பெப்ர வரி மாதம் இலங்கை தகவல் உரிமைகள் ஆணைக்குழுவானது வெளிநாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தொடர்பில் சவுதி அரேபியா, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட இரு தரப்பு உடன்படிக்கை தொடர்பான தகவலை குறித்த நாடுகளில் வேலை செய்யும் இலங்கை பிரஜைகளின் உரிமையை பாதுகாக்கும் பொருட்டு பொது நலன் கருதி வெளியிடுமாறு உத்தரவிட்டது. இந்த உதாரணங்களில் இருந்து பொது நலன் கருதி பொது மக்களால் மேற்கொள்ளப்படும் தகவல் கோரிக்கையானது பரந்தளவு வித்தி யாசமானது என்பது தெளிவாகின்றது.

பொதுவாக பிரஜைகள் தகவல் உரி மைச் சட்டத்தை ஒரு பயனுள்ள கருவியாக பயன்படுத்தி இருக்கின்றார்கள். ஒருவகை யில் பிரஜைகள் சட்டத்தினை தனிப்பட்ட நிலையில் பயன்படுத்தியுள்ளார்கள். மற் றொரு வகையில் பொது நலன் மற்றும் பொது மக்கள் என்ற அடிப்படையில் பலர் பயன்படுத் தியுள்ளனர். இது கடந்த காலத்தில் மூலம் பெற்ற அனுபவங்களாக குறிப்பிடலாம்.

அரசியலமைப்பின் 19 வது திருத்தத் தின் 14 (அ) பிரிவின் மூலம் உத்தரவாத மளிக்கப்படும் தகவல் அறியும் உரிமையை வலுப்படுத்துவதன் மூலம் பொது நிறு வனங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுகளை வளர்ப்பதற்கான நோக்கத்துடன் தற்போதைய சட்டம் வடிவ மைக்கப்பட்டுள்ளது. பொது நலன்களை அடைவதற்கே அதன் நோக்கம் இருந்தது. நன்கு அறிந்த சமுதாயத்தை உருவாக்கி, மக்களுக்கு பொறுப்புணர்வு, நல்ல ஆட்சி மற்றும் ஊழல் மற்றும் லஞ்சம் ஆகியவற் றினை சுவுஜ மூலம் நீக்கல் போன்றன அடை யப்பட வேண்டும். புள்ளிவிவரங்கள் பொது ஆர்வமுள்ள விடயங்களைக் காட்டிலும் தனிப் பட்ட நலனுக்காக தகவலறியும் உரிமைச் சட்டம் அதிகமானதாக பயன்படுத்தப்படுகின் றது.

இந்த போக்கு மாற்றப்பட வேண்டும். நடைமுறையில், தகவல் அறியும் உரிமை முறையீடுகளில் 50 சதவிகிதத்திற்கும் மேலா னவை தனிப்பட்ட இயல்புடன் தொடர்புபட்ட வையாகும். கிட்டத்தட்ட 27 சதவிகிதம் மனித வள முகாமைத்துவத்துடனான நியமனங்கள், இடமாற்றங்கள், வேலைகள் தொடர்புடை யவை, மற்றும் 20 சதவிகிதம் நிலம் மற்றும் சொத்து தொடர்பானவை. தகவலறியும் உரி மை என்பது முழுமையான சுதந்திர உரிமை யல்ல. பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் பற்றிய தகவல்களை மட்டுமே இதன் மூலம் அறிய முடியும். தேசிய பாதுகாப் புடன் தொடர்புடைய விடயங்கள், தனிப்பட்ட வர்கள் மற்றும் நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தத்தக்கூடி விடயங்கள், வர்த்தக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரத்தியேகத் தகவல்கள் போன்றவற்றை இந்தத் தகவல் அறியும் உரிமையின் கீழ் அறிய முடியாது.

நாடாளுமன்றத்தில் நாட்டு மக்களுக் குத் தேவையான பல சட்டங்கள் நிறை வேற் றப்படுகின்றன. நிர்வாக நடவடிக் கைகளுக் கான சட்டங்களும் பல்வேறு தேவைகளுக் குமான சட்டங்களும் நிறைவேற்றப்படுகின் றன. ஆயினும் இந்தச் சட்டங்கள் குறித்த விபரங்களைப் பொது மக்கள் அறிந்திருப்ப தில்லை. இதனால் பல சட்டங்கள் இருந்தும், அவற்றால் பொதுமக்களுக்குப் பயன் ஏற்ப டாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பல தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும், பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் சட்டங்களில் வழி செய்யப்பட்டுள்ள போதிலும், அந் தச் சட்டங்கள் பற்றிய விபரங்களை அறியா மல் தெளிவற்றிருப்பதனால், பொதுமக்கள் நன்மையடைவதில்லை. சில வேளைகளில் அவர்கள் பாதிப்படைகின்றார்கள். தகவல் அறியும் சட்டம் என்பது மிக முக்கியமான சட்டமாகும். இது முழுக்க முழுக்க பொதுமக் களின் நன்மை கருதி, அவர்கள் பயனடை வதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமா கும். தகவல்களை அறிந்து கொள்கின்ற உரிமை இந்தச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத் தப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்படும்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/

போது, அதிகாரிகள் அரச திணைக்களங்கள் சில வேளைகளில் சிரமங்களுக்கும் கஸ்டங்களுக்கும் உள்ளாகலாம்.

ஆனால், இதனால் பொதுமக்கள் ஜனநா யக ரீதியாகவும் பெரிதும் பயனடைகின்றார்கள். அதுமட்டுமன்றி, அதிகாரிகள் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்கும், ஊழல்கள் மோசடிகளைத் தடுப்பதற்கும், இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழி வகுத்திருக்கின்றது.

அதேவேளை தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்து பின்னர் தாயகம் திரும்பியுள்ள தமிழ்மக்கள்இ வடபகுதி முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தில் எழுந்துள்ள காணி உரிமைப் பிரச்சினை தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நிலைப்பாடு, இராணுவம் கைப்பற்றி வைத்துள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பிலான தகவல்களை அறியும் உரிமை தொடர்பிலான நிலைப்பாடு, இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்டும் வேறு பல வழிகளில் பாதிக்கப்பட்டுமுள்ளவர்கள் பறறிய புள்ளிவிபரத் தகவல்களைத் தெரிந்து கொள்வதில் இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நிலைப்பாடு என்பது தெளிவில்லாமல் போய் விட்டது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வைக்குள் இராணுவம், பொலிஸ் மற்றும் பிரதான அமைச்சுக்கள் சிலவற்றின் விபரங்களை ஊடகவியலாளர்கள் உட்பட யாரும் பெறமுடியாது.

அத்துடன், காணாமல்போனோர், கடத்தப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை உறவினர்கள், நண்பர்கள் பொலிஸ் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் சுநத்திரமாக பெறக்கூடிய ஏற்பாடுகளும் இந்தச் சட்டத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. சமூகவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சித்திரவதைக்கு




உள்ளாகுவது, காயப்படுவது, உயிரிழப்பது போன்ற தகவல்களை உறவினர்கள் அல்லது நண்பர்கள் பெறமுடியுமா என்பது பற்றியும் சரியாக குறிப்பிடப்படவில்லை. ஆகவே, 17 ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஏற்பட்ட நிலைமை தகவல் அறியும் உரி மைச் சட்டத்திற்கும் வரக்கூடிய சந்தர்ப்பங் கள் உள்ளன. ஏனெனில், தகவல்களைப் பெறுவதற்கு சாதாரண பொது மக்களுக்கு சட்ட உரிமை வழங்கப்படுவதை அரசியல்வாதி கள் விரும்பமாட்டார்கள் என்பது கண்கூடு. அரசநிறுவனங்கள், திணைக்களங்களில் பாதிக்கப்படும் மக்கள் ஒம்புட்ஸ்மன் எனப்படும் குறைகேள் அதிகாரியிடம் நேரடியாக முறையிட்டு உதவிகளை பெறமுடியும். 1994ஆம் ஆண்டு இந்தச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது.

ஆனால், இந்தச் சட்டம் தொடர்பான அறிவு பொதுமக்களிடம் இருக்கின்றதா? ஒம்புட்ஸ்மன் அலுவலகம் எங்கே அமைந்துள்ளது என யாருக்குமே தெரியாது. அது தொடர்பான விழிப்புணர்வை அரசாங்கம் செய்வதும் இல்லை. இந்த நிலையில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? என்று பார்ப்போம். (முற்றும்)

www.silampu.com





## மாசி – 2021 இல் வெளியான

# எண்ணமும் எழுத்தும்... 01

## பாராட்டுப்பெறும் கவிதைகள்

**பரா - கனடா**

நாதியற்ற நம்தாய்மார் நான்கு வருடங்கள்
நீதி கேட்டார் வீதியில் நின்று
பெற்ற வயிற்றில் பற்றி எரிந்த தீ
நெற்றிமேல் இப்போ நீண்டு எரிய
கணவனை இழந்த கண்ணகை தந்த தீ
கண்களின் மேல் கனல் விட்டு எரிய
இனியாவதோர் விடிவினை நோக்கி
ஜெனிவாவை கேட்கிறார் இனியதோர் தீர்வு

**செல்வராசா றமேஷ்**
**கோவிற்காடு இத்தாவில், பளை.**

தீச்சட்டி ஏந்தி
தீபாராதனை செய்கிறோம்
இறைவா
காணாமல் போன உங்கள்
பிள்ளைகளை
எங்களிடம் கொண்டு வந்து
சேர்த்துவிடு

## கைவேப்பிலையும் காளி அவதாரமும்

**அருள்ஈசன் - பிரான்ஸ்**

பேரவலத்திலும் பெரும் அழிவிலும்
தப்பி ஓட்டி வந்த உறவுகளை
போர் மரபு அறியா பொய்முகத்தோர்
கரங்களிலே கையழித்த உறவுகளாய்
ஆறு இரண்டு ஆண்டுகளாய் அயராது
விதவிதமாய் முறையீடு செய்தபோதும்
யாதும் ஒரு பயனும் இன்றி – ஏமாந்தோர்
மீளுகின்ற பேர் எழுச்சி கற்பூர சட்டியுடன்...





# எண்ணமும் எழுத்தும்... 02

உங்கள் எண்ணத்தில் உதிக்கின்ற வரிகளை கவிதையாக்கி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

4 தொடக்கம் 8 வரிக் கவிதையுடன்
முழுப்பெயர்,
தபால் முகவரி,
தொடர்பு இலக்கம் என்பவற்றை சேர்த்து அனுப்புங்கள்.
முடிவு திகதி: 10.06.2021.

தபால் முகவரி: அருள்ஒளி கிரியேசன்ஸ்
கலைவாணி பில்லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

வட்ஸ் அப் : +94 76 53 83 995

www.silampu.com/magazine/

www.silampu.com

www.silampu.com/magazine/




www.silampu.com


சுந்தரலிங்கம் சஞ்சீபன்
நாடகமும் அரங்கியலும்
சிறப்புக் கற் கை,
நுண்கலைத்துறை,கிழக்குப்
பல் கலைக்கழகம்,
இலங்கை.

# ஆளுமையை அதிகரிக்கும் உள்ளூர் விளையாட்டுக்கள் ஒரு மனப்பதிவு



"ஆலையிலே சோலையிலே ஆலம் பாடிச் சந்தையிலே கிட்டிப்புல்லும் பம்பரமும் கிறுக்கியடிக்கப் பாலாறு பாலாறு பாலாறு"

"கொத்திருக்கே கொத்து என்ன கொத்து? மாங்கொத்து. என்ன மா?

விளையாட்டு மா. யாருக்கு வேண்டும்? போட்டுத்து போ!..."

இவ்வாறாக கிராமப்புறங்களில் சிறார்களினால் சந்திகளிலும் தெருக்களிலும் பாடப்படும் பாடல் ஓசைகளைக் கேட்பது என்பது இன்றைய சூழலில் குறைந்துகொண்டு வருகிறது. காரணம் காலனியத்தின் பின்னர் அறிமுகமாகிய விளையாட்டுக்களின் அறிமுகத்தினாலும் ஆதிக்கத்தினாலுமே ஆகும்.

பொது வாக விளையாட் டுக்கள் என்பது பொழுது போக்கிற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் விசேடமாக கற்றல் நோக்கத்திற்காகவும் நடாத்தப்படும் ஒரு செயற்பாடாகும்.

அன்றைய சூழலில் எம் மூதாதையர் எமக்குச் சொல்லிக் கொடுத்த எம் விளையாட்டுக்களில் அனைவரும் எம் சொந்த மண்ணிலேயே உருண்டு புரண்டு புளுதி படிய கூடி விளையாடிய



www.silampu.com/magazine/
www.silampu.com



போது ஏற்பட்ட மகிழ்ச்சியினை இன்பத்தை சுதந்திரத்தை இலகுவில் மறந்து விட முடியாது. அங்கு சுதந்திரம் என்பது இயல்பானதாகக் காணப்பட்டது. செலவீனங்கள் அற்றதாக இயற்கை வெளியிலே இயற்கையோடு ஒட்டி உறவாடும் தருணங்களாக அவை இருந்தன.

இன்றைய சூழலில் பெரும்பாலும்



விளையாடடுக்கள் என்பது "பதினொரு முட்டாள்கள்விளையாடபதினோராயிரம் முட்டாள்கள் பார்த்துக் ரொண்டிருக்கின் றார்கள் " என்ற பெர்னாட்சாவின் கருத்துப் படியே காணப்டுகின்றது. காரணம் என்னவெனில் காலனிய நவீன சிந்தனையின் ஊடாக கட்டமைப்பு ரீதியாக விளையாட்டுக்களை வகைப்படுத் கட்டுப்பாடுகளை கொண்டு திறன் உடையவர் மாத்திரமே விளையாடலாம் என் றும் பங்குபற்றுவர்களின் எண்ணிக்கையிலும் வரையறைகளைக் கொண்டு குறுகிய எல்லைக்குள் வடிவமைக்கப்பட்டே காணப்படுகின்றது. இன்று பெரும்பாலும் விளையாடடுக்கள் வியாபாரத்திற்குரியதாக ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால் எம் பாரம்பரிய விளையாட்டுக்களில் அவ்வாறு இல்லை. அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களின் திறமைகளை எவ்வித கடடுப்பாடுகளோதிணிப்புக்களோ இல்லாது சுதந்திரமாக வெளிக்கொண்டுவரும் களமாவே அவை அமைகின்றன.

நவீன சிந்தனைகளின் விளைபொருளாக சிறார்கள் இன்று பாடசாலை விட்டு வீடு திரும்பியதுமே கம்பியுட்டர் பயிற்சி, மேலதிக படிப்பு, இரவு நேர வகுப்பு என கல்வியில் போட்டி என்ற

www.silampu.com/magazine/
www.silampu.com

சிந்தனைக்குள் உட்படுத்தப்பட்டு பெற்றோர்களின்

பெயர், மதிப்பு, பேராசைகளுக்காக ஓய்வின்றி இயக்க முற்படுகின்ற வேளையிலே சிறார்கள் விளையாட்டுக்களை மறந்து விடுகின்றனர்.

இதனால் அவர்கள் உடல்கெட்டு மனமும் பாதிக்கின்றது. விளையாட்டு என்றால் **Computer Games, Cricket, Football**




என்றே கூறுகின்றனர். ஆனால் எம் நாட்டுப்புற மக்களால் தொன்று தொட்டு மரபு வழியாக விளையாடப்பட்டு வருகின்றதான விளையாட்டுக்களே எம் பாரம்பரிய விளையாட்டுக்களாகும்.



மக்களின் சமூக நிலை, வாழ்க்கை முறைமைகள், குழு மனப்பான்மை, பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் என அனைத்தையும் உள்ளடக்கியனவாக அம் மக்களின் நிலத்தோற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. இவ் விளையாட்டுக்களில் நாம் வாழ்வியலில் கற்க வேண்டிய முக்கியமான பல ஆற்றல்களை வளர்க்க கூடியதாக இருக்கின்றது. அதிகமாக சிந்திக்கும் திறமை, நுணுக்கங்களை அறிதல், ஒப்பிட்டு அறியும் ஆற்றல் என மனித சுயகற்றலை வளர்க்கும் தன்மைகள் நிறையவே காணப்படுகின்றன. ஊர் விளையாட்டுக்களில் ஓர் அணியைத்



www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/

தெரிவு செய்வது தொடக்கம் அது முடியும் வரையான அனைத்து செயற்பாடுகளும் எம்மை நல்வழிப்படுத்து வனவாகவே இருக்கும். உதாராணமாக ஒரு சிக்கலான இடத்தில் நாம் மாட்டிக் கொண்டுள்ள வேளை அவ்விடத்தில் இருந்து எவ்வாறு நாம் தந்திரோபாயங் களை கையாண்டு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதனை

"நாயும் புலியும்" எனும் விளையாட்டு



எம் வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டியதை உணர்த்தி நிற்கின்றது.

இன்றைய சூழலில் நோய்கள் ஏற்பட்டால் மாத்திரமே உடற் பயிற்சிகளை நேரம் ஒதுக்கிச் செய்வார்கள். ஆனால் எம் பாரம்பரிய விளையாட்டுக்களில் அனைத்து வகையான பயிற்சிகளும் இயல்பாகவே காணப்படுகின்றன.

திறந்த வெளியிலே பல விதமான சத்தங்களை எழுப்புகின்றனர். மனம் திறந்து பாடுகின்றனர். கிட்டி அடித்தலின் போது மூச்சியினை அடக்கிப் பிடித்து கொண்டு ஓடுகின்றனர் அதனோடு இணைந்து பாடலையும் பாடிக் கொண்டு செல்கின்றனர்.

இதன் போது மூச்சுப்பிற்சி, குரல் பயிற்சி , உடற்பயிற்சி என பல வகை பயிற்சிகளும் கிடைக்கின்றது. பொது வாக மாலை நேரங்களில் ஒவ் வொரு கிராமங்களிலும் வீதிச் சந்திகளிலும் வயல் வெளிகளிலும் கடற்கரை ஓரங் களிலும் நில அமைப்பு முறைமை களுக்கு ஏற்றாற் போன்று சிறார்கள் ஏதோ ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

அதனோடு இணைந்து பருவகாலங் களை அடிப்படையாகக் கொண்டும் விளையாட்டுகள மாறுபட்டனவாகக் காணப்படுகின்றன. சாதாரண காலங் களில் கிட்டிப்புல், நாயும் புலியும், நொண்டி போன்றவைகளும் பண்டிகை காலங்களில் ஊஞ்சல் கட்டுதல், பம்பரம், வழுக்குமரம் எனப் பல வகை விளை யாட்டுக்களை விளையாடுவார்கள். இன்றைய நவீனத்துவ சூழலில்



www.silampu.com



சிறார்கள், மாணவர்கள், குழந்தைகள் இவைகளை அனுபவிக்கும் வாய்ப்புக் கள் மறுக்கப்பட்டவர்களாகவே காணப் படுகின்றனர். காரணம் என்னவெ-ன்று நோக்கினால் இன்றைய நவகால னிய நவீனத்துவத்தின் ஆதிக்க தாண்டவத் தினால், வர்களின் பொழுதுபோக்கு அம்சங்களாக இருந்த இடத்தில் இருந்து வியர்வை சிந்தாமல் விளை யாடும் விளை யாட்டுக்களாக தொலைக் காட்சி கார்டூன்கள், **Tv Games** , **Ve-dio Games**, **Computer Games** என தொலைத்தொடர்பு சாதனங்களின் பயன்பாடுகளிலே ஓர் இடத்தில் இருந்து கொண்டே தனிமையில் நேரங்களை செலவிடுபவர்களாக மாற்றப்பட்டு வரு கின்றனர். இதனால் கண்பார்வைக் குறைபாடுகள், சோம்பேறித்தனம், மன அழுத்தம் என்று பல ஆபத்தான நிலைமைகள் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இதனை அறிந்து இன்றைய சூழலில் மாணவர்களை சிறுவர்களை குழந்தை களை ஓர் ஆழுமை உள்ளவர்களாக வும் சிறந்த செயற்பாட்டாளர்களாக வும் மற்றும் அவர்களை சுறுசுறுப் போடும் இயங்க வைக்கும் நோக்கில் படிப் புக்கு விளையாட்டுக்கள் தடை இல்லை என்ற எண்ணத்தை உடைத்தெறியும் நோக்கில் எமது பாரம்பிய விளை யாட்டுக்களை அரங்க பயிற்சிக்காகவும் தனிமனித ஆளுமைகளை விருத்திய டைய செய்வதற்காகவும் மற்றும் சிறுவர் களின் ஆடுதல் ,பாடுதல், கதை கேட்டல், கதை கூறுதல், கீறுதல் , வரைதல் , கொட் டில் கட்டுதல் போன்ற ஆளுமை விருத்



திக்கான விளையாட்டுக்களமாக மாற்றி அதனை சிறுவர் கூத்தரங்காக வடி வமைத்தும் பாடசாலை மட்டங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் இன்றைய நாடக ஆளுமைகளினதும் இச் செயற்பாடா னது பாராட்டத்தக்கதோர் செயற்பாடா கும்.

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டியடித்தல், சிலம்பாட்டம், நாயும் புலியும், கள்ளன் பொலிஸ், நொண்டிக்கோடு, கிள்ளிக் கிள்ளிப் பிராண்டி, வழுக்கு மரம், ஊஞ்சல், கோலிக்குண்டு போன்றவற்றை புத்தகங்களிலும் கேட்டும் மட்டுமே இன்றைய சூழலில் அறிந்து கொள்கின்றனர்.

இதன் காரணமாக இன்றைய 21ஆம் நுற்றாண்டில் காலனிய நவீன சிந்தனைகள் தலைவிரித்தாடினாலும் பாரம்பரிய விளையாட்டுக்களினால் வளர்த்தெடுக்கப்படும் புத்திக் கூரிமை, பார்வைக் கூர்மை, கவனிப்புத்திறன், சிந்தனைத் தூண்டல் , மன அழுத்தங்களைக் குறைத்தல், இரத்த ஓட்டம் சீராக்கல், வலிகளைப் போக்கல், சிறந்த திட்டமிடும் தன்மை, சுதந்திரம், மகிழ்ச்சி, உடற், குரல், மூச்சுப் பயிற்சிகள் எனப் பல வாழ்வியல் நன்மைகளைத் தரும் பாரம்பரிய விளையாட்டுக்களை இன்றைய கல்வி முறைக்குள் உள்வாங்கியோ அல்லது பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக இதற்கான நேரங்களை ஒதுக்கியோ இவர்களை இவ் விளையாட்டுக்களில் ஈடுபட வைப்பதன் மூலம் அவர்ளின் ஆரோக்கியம் சிறந்து விளங்குவது மாத்திரம் இன்றி எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும் அத்தோடு அவர்கள் எவ்விடத்திலும் முன்னின்று செயலாற்றக் கூடிய துடிப்புள்ள ஆளுமை உள்ளவர்களாக மாற்றும் வல்லமை இப்பாரம்பரிய விளையாட்டுக்களில் காணப்படுகின்றது.

www.silampu.com





### Our Services

- Corporate Consultations
- 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி கள் (Private Limited Liability Companies) உத்தரவாதத்தால் வரை யறுக்கப்பட்ட கம்பனிகளின் கூட்டிணைப்புகள் (Companies Limited by Guarantee).
- முதலீட்டுசபையின் கீழான கம்பனி பதிவுகள் (Board of Investment)
- Routine and nonroutine Corpoate Secretarial Services
- Societies Ordinance ன் கீழான சங்கங்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளின் பதிவுகள்.
- வியாபார குறியீடுகள் (Trade Mark இலட்சினைகள் Logos), Palent and Industrial Designs, கண்டுபிடிப்புகள் இலக்கிய படைப்புகளுக்கான பதிப்பரிமைகளை 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைத்துவ சட்டத்தின் கீழாக காப்பரிமை யளித்தல்.
- கம்பனிகளின் கலைப்பு (Liquidation), பதிவாளர் இடாப்பிலிருந்து கப்பனியின் நீக்குதல் (Stuck off)

### Our Values

- உயர் தொழில் வான்மையான வழிகாட்டல்
- விரைவான சேவை
- Online Service
- வெளிப்படைத்தன்மையான விலையிடல்
- No More Visiting To Colombo

### Regional Offices

#### Jaffna Office

Arul Oli Creations (PVT) LTD
No.73, Brown Road,
Neeraviyadi Pillayar Kovil, Jaffna.

Email : aruloli2014@gmail.com
Phone : 021 221 2580 / 074 150 0745

**Head Office**

ALTER EGOS CORPORATE CONSULTANTS (PVT) LTD
No.291 B/1, Ground floor, DAM street, Hulftsdorp, Colombo 11

Phone : 077 264 9150
Email : alteregos.cc@gmail.com
Twitter : Alteregos10


www.silampu.com/magazine/
www.silampu.com

# மேதகு ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை

# ஓர் அனுபவக் குறிப்பு...



**குறிப்பு:** சில ஆண்டுகளாக ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை பற்றி என்னுடைய தந்தையார் கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்கள் அவ்வப்போது கூறிய - கூற விரும்பும் எண்ணங்களைக் குறித்து வைத்திருந்தேன். இப்போது அவற்றை முழுமைப்படுத்தி அவருடைய எண்ணங்களுக்கு வார்த்தை வடிவம் கொடுத்திருக்கின்றேன்,

செ. அன்புராசா - மன்னார்

## மிகுந்த மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவர்

ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் செய்த சேவைகளைப் பாராட்டி அவருடைய 75ஆவது அகவையின் நிறைவிலும் 25ஆவது ஆயத்துவ பணியிலும் பாராட்டுப் பத்திரம் கொடுக்கவேண்டும், வாழ்த்துப்பா இசைக்க வேண்டும் என என் மனம் எவ்வளவோ விரும்புகிறது. ஆனால், என் தற்போதைய நிலையில் நினைத்தபடி போய்வரவோ, எழுதவோ, பாடவோ என்னால் முன்புபோல முடியாதுள்ளது. இவற்றில் ஈடுபடவேண்டும் என மனம் விரும்புகிறது, ஆனால், உடல்நிலை அத்தகைய ஒன்றுக்கு ஆயத்தமாக இல்லை என்பது எனக்குத் தெரிகிறது.

பலவீனமான இந்நிலையிலும், இச்சிறு ஆக்கத்தைக்கூட என் குருமகனின் உதவியோடுதான் எழுதுகிறேன். என் சொற்களுக்கும், என் அரைகுறை எண்ணங்களுக்கும், என் உணர்வுகளுக்கும் அவரே முழுமையான வடிவம் கொடுக்கிறார். ஆயரோடு உண்டான அனுபவங்களில் சிலவற்றையேனும் பதிவுசெய்யவேண்டும் என்ற ஆசையினாலும், ஆயர் அவர்கள் செய்த பணிகளுக்கு எல்லாம் மனமார் ந்த என் நன்றிகளை தெரிவிப்பதாகவும் இச்சிறு கட்டுரை அமைகிறது.

## இருவரும் ஒன்றாய் ஒரே வகுப்பில்!

ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் நானும் சமகாலத்தவர்கள். 1940ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 08இல் நான் பிறந்தேன், அதே ஆண்டு ஆயர் சித்திரைத்திங்கள் 16இல் பிறந்தவர். நான் முருங்கன் பாடசாலையில் பயிலுகிறபோது ஆயர் அவர்களும் சில ஆண்டுகள் எங்கள் பாடசாலை

www.silampu.com/magazine/
www.silampu.com

யில் சிறுவனாய் படித்தார். இருவரும் ஒரே வகுப்பில் சிறுவயதில் கற்ற இனிய நினைவுகள் இன்னும் இனிமையாகத் தான் மனதில் வந்து செல்கின்றன.

ஆயர் அவர்களுடன் சிறுவயது பாட சாலை நாள்களை எண்ணிப் பார்க்கின்ற போது அவரின் அமைதியான போக் கும், அடக்கமான பேச்சும், ஆழமான செயற்திறனும், இறைவனுக்கும் இறை மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் என்ற அவருடைய மனப்பாங்கும் எப்போதுமே அவரில் இருந்து வந்தது என்பதை அவரை அறியத் தொடங் கிய காலம் முதலே அவதானித்திருக் கிறேன்.

## ஆசிரியர் பெரியோர் மட்டில் நன்றியுணர்வு கொண்டவர்

அன்று எங்கள் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்களுள் முக்கியமான ஓர் ஆசிரியர் யாழ்ப்பாணம் ரெம்பிள் றோட் இல. 02 இல் வசித்து வந்த ஆசிரியர் றோகேசன் யோசவ் என்பவர் ஆவார். ஆயர் அவர்களுடைய வாழ்விலும் என்னுடைய வாழ்விலும் ஆசிரியர் றோகேசன் யோசவ் அவர்களின் பங் களிப்பு மிகப்பெரிது. இவ்வாசிரியரே எங்கள் வாழ்வின் உயர்வுக்கு வித் திட்டவர் என்பதை இன்றும் நன்றி யோடு எண்ணிப் பார்க்கிறேன்.

றோகேசன் ஆசிரியருடைய இறுதிக் காலம் வரை ஆயர் அவர்கள் எத்த கைய ஓர் அன்பான ஆசிரிய - மாணவ



உறவை அவருடன் பேணிவந்தார் என்பதை நீண்ட காலமாகவே அறிந் திருக்கிறேன். இவ்வாறு தனக்குக் கற்றுக்கொடுத்த ஆசிரியர்களோடும் தன்னை ஆளாக்கிய பெரியவர்களோ டும் பெருமதிப்புடனும் நன்றிப்பெருக்கு டனும் பழகிக்கொள்வார். ஆயராகத் திருப்பொழிவு பெற்ற பின்னரும் கூட தன்னை உருவாக்கி உயர்த்தி விட்ட றோகேசன் ஆசிரியருடன் ஆயர் அவர்கள் கொண்டிருந்த உறவும் வைத் திருந்த அன்பும் அக்கறையும் மிக உயர்வானது.

## மக்கள் பணியாளர்

ஆயர் அவர்கள், குருத்துவ நிலைக் குத் தன்னை அர்ப்பணித்து, இளம் குருவாக எங்கள் பங்கான முருங்கன் பங்கில் பணியாற்றியபோது நானும் ஓர் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



டிருந்தேன்.

அந்நேரத்தில் அருள்தந்தை சேவியர் குருஸ் அவர்கள் பங் குத்தந்தையாகவும், ஆயர் அவர்கள் இளம் உதவிப் பங்குத்தந்தையாகவும் முருங்கன் - உயிலங்குளம் பங்கில் பணியாற்றினார்கள்.

ஆயர் அவர்கள், இளம் குருவாகப் பணியாற்றிய நாள்களில் ஏழைகள்பால் விசேச கருசனையுடையவராக இருந்ததை நான் அறிவேன். 1970களில் கடினமான சூழலில் மக்களுடனான அவரின் பணிகள் காத்திரமானதாக இருந்தன. எவ்வாறெல்லாம் மக்களுக்குத் தனது சேவை கிடைக்க முடியுமோ அவ்வாறெல்லாம் தனது தொண்டுகளை வழங்க அவர் என்றுமே பின்னின்றதில்லை.

## மனம் திறந்து பாராட்டுகிறவர்

என்னுடைய கலைச் சேவைகளையும், மறைத் தொண்டினையும், சமூகப் பணிகளையும், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஊடாக நாங்கள் ஆற்றிய கலைப் பணிகளையும் எப்போதும் மனம் திறந்து பகிரங்கமாகப் பாராட்டுபவராக ஆயர் அவர்களை பற்பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். அதன் ஒரு வெளிப்பாடாகத்தான் மன்னார் மறைமாவட்டத்தின் சார்பாக 'திருக்கலை வேந்தன்' என்ற கௌரவப் பட்டத்தை எனக்களித்து ஆயர் அவர்கள் என்னை கௌரவித்தார்கள்.

ஆயர் அவர்களுக்கு பல்வேறு மேய்ப்புப்பணி அலுவல்கள் இருப்பினும், முக்கியமான நிகழ்வுகளுக்கு அவரை அழைக்காமல் எங்கள் நிகழ் வுகள் இடம் பெறுவதில்லை. அதேபோல நாங்கள் அழைக்கிறபோதெல்லாம் அது நூல் வெளியீடாக இருந்தாலென்ன, நாடக ஆற்றுகையாக இருந்தாலென்ன, ஏனைய கலைவிழாக்களாக இருந்தாலென்ன அவற்றில் பங்கேற்று எனக்கும் எம் மன்றத்தினருக்கும் உற்சாகம் அளித்துவந்தார்.

எங்கள் சமூகப்பணிகள், கலைப் பணிகள் மட்டில் ஆயர் அவர்கள் மிக உயர்வான மதிப்புக் கொண்டிருப்பவர். "குழந்தை மாஸ்ரர் நானும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். அவருடைய கலைப்பணிகளையும் திருச்சபைக்கு ஆற்றும் பணிகளையும் நான் நன்கு அறிவேன்" என்று ஆயர் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகக் குறிப்பிட்டதையும் தம் தோழமை உணர்வை வெளிப்படுத்தியதையும் மனமகிழ்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

www.silampu.com

இப்பேர்ப்பட்ட நல்ல மனிதர்களுடைய ஆசீரும் பாராட்டும்தான் நாங்கள் இற்றைவரை 55 ஆண்டுகளுக்கு மேலாக தனியாகவும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஊடாக வும் கலைப்பணிகளையும் மறைப்பணிகளையும் சமூகப்பணிகளையும் ஆற்றி வருவதற்குத் தூண்டுதலாக இருந்து வந்திருக்கிறது.

## பல நிகழ்வுகளில் பங்கேற்று ஊக்குவித்தவர்

எடுத்துக்காட்டாக 'பரிசுபெற்ற நாடகங்கள்' (1997), 'மரபுவழி நாடகங்கள்' (1998), 'மாதோட்டம்' கவிதைத் தொகுதி (2000) போன்ற என்னுடைய நூல் வெளி யீடுகளுக்கும், முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தினால் என்னுடைய கலைப்பணிகளைப் பாராட்டி வெளியிடப்பட்ட கலைப்பணி நயப்பு மலரான 'கலைத்தவசி' என்ற நூல் வெளியீட்டிற்கும் (2012) பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமையை எண்ணிப் பார்க்கிறேன்.

மேலும், எம் ஆலய நூற்றாண்டு விழா மலரான 'புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டுவிழா மலர் (2008) வெளியீட்டிற்கும், எம் ஆலய புனிதரின் பெயரிலான புனித சந்தியோகுமையோர் நாடகத்திற்கும் (1995, 2009), அமரர் புலவர் ச.பாவிலு(சீனி) அவர்களால் எழுதப்பட்டு இரண்டாவது தடவையாக ஆற்றுகை செய்யப்பட்ட புனித சில்வேஸ்திரியார் வாசாப்பாவிற்கும் (2012) ஆயர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து எம்மை உற்சாகப் படுத்தியிருந்தார் என்பதை நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வு மிகப்பெரிய அளவில் 2014ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் நடைபெற்றபோது அந்நிகழ்வில் ஆயர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து அந்நிகழ்வு முழுமையாக நிறைவடையும் வரை இருந்து சென்றமை எனக்கு நினைவிருக்கிறது.

## நிறைவாக...

இவ்வாறு, ஆயர் அவர்கள், தம்முடைய பிரசன்னத்தினாலும் வழிநடத்துதலினாலும் பல்வேறு வகையில் எமக்கு உறுதுணையாக இருந்து உற்சாகம் அளித்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கையில் ஆயர் அவர்கள் எவ்வகையில் தன்னைச் சமூக வாழ்வினிலும், கலைப்பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளார் என்பதை நினைத்து இறைவனுக்கும் ஆயர் அவர்களுக்கும் என் நன்றிகளைச் சமர்ப்பித்து நிற்கிறேன். ஆயர் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அவரின் ஆன்மா இறையமைதியில் இளைப்பாறுவதாக.

**கலைத்தவசி குழந்தை செபமாலை**
தலைவர், முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்
முருங்கன்.

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/



# இலக்கியச்சுவை

## கவிச்சக்கரவர்த்தி கம்பரின்

# வானூர்தி

1000 ஆண்டுகளுக்கு முன்னரே, வானூர்தி எப்படி பறக்க வேண்டும் என்று கம்பர் தன் கம்ப ராமாயணத்தில் குறித்து இருக்கிறார்.

இது உண்மையில் வியப்பான ஒன்று தான். ஏனென்றால் ஆரம்பத்தில் மேலை நாடுகளில் வானூர்திகள் உருவாக்கப்பட்ட போது, அதை எப்படி பறக்க வைப்பது என்று தெரியாமல் நிறைய பேர் மாண்டு போனர். சிலர், மலைகளின் உச்சியில் ஏறி அங்கிருந்து குதித்து பறக்க வைக்க முயன்றனர். ஆனால், 1000 ஆண்டுகளுக்கு முன்னர் வானூர்தி எப்படி பறக்க வேண்டும் என்று கம்பர் குறித்திருக்கிறார்.

“மண்ணின் மேல்அவன் தேர்சென்ற சுவடு எல்லாம் ஆய்ந்து விண்ணில் ஓங்கிய ஒருநிலை மெய்யுற வெந்தபுண்ணில் ஊடுஒரு வெல்என மனம்மிகப் புழுங்கிஎண்ணி நாம்இனிச் செய்வது என்ன இளவலே என்றான்.”

இராவணன் விமானத்திலே சீதையைக் கவர்ந்து போய்விட்டான். இராமரும் தம்பியும் தேடிப் போகிறார்கள். இராவணனின் விமானச் சக்கரங்கள் மண்ணிலே உருண்டு சென்ற அடையாளங்கள் தெளிவாகத் தெரிகிறது. அதைப் பின்பற்றிச் செல்கிறார்கள்.

ஆனால் போகப் போக தெளிவாகத் தெரிந்த சக்கரச் சுவடுகள்தெளிவில்லாமல் ஆகி விடுகின்றன. மண்ணிலே பட்டும் படாமலும் தெரிகின்றன. ஒரு கட்டத்துக்கு மேல் விமானத்தின் சுவடுகளே இல்லை. ஆம்! விமானம் ஓடுபாதையில் ஓடி வானத் தில் எழுந்து போய்விட்டது. எவ்வளவு துல்லியமாக விளக்கி இருக்கிறார் என்று பாருங்கள்.

வானூர்திகள் ஓடுபாதையில் ஓடி வேகம் எடுத்து புவியீர்ப்பை முறித்த பின்தான் மேலே எழ முடியும் என்ற விஞ்ஞான விளக்கம் சோழர் காலத்துக் கவிஞனான கம்பனுக்கு எப்படித் தெரிந்து இருந்தது.

வானூர்தி பறப்பதை நேரில் கண்டாரா? இல்லை! அது தொடர்பான ஏடுகள் அந்த அறிவை வழங்கினவா? அப்படியென்றால், தாடியும் சடாமுடியும் கொண்டதாகச் சித்தரிக்கப்படும் சங்கப் புலவர் கூட்டத்தில் வானூர்திகளை வடிவமைக்கும் திறன் தெரிந்த பொறியியலாளரும் இருந்தார்களா!? அறிவியலும் ஆன்மீகமும் கலந்ததுதான் இந்து தருமம்...!

கு பண்பரசு
– சமூக வலைத்தளத்திலிருந்து

www.silampu.com



# வாங்க சிரிக்கலாம்

## கொரோனா லொக்டவுண் கால பகிடி...

ஏரியா **G. S** உடைய அனுமதியுடனும் **G A** வழங்கிய பாஸ் உடனும் ஊர் ஊராக சுதந்திர மாக மீன் விற்றுச் செல்லும் மீன் வியாபாரி ஒருவரை தனது வீட்டுக்கு முன்பாக இடை மறித்தார் நம்ம பாடசாலை அதிபர் ஒருவர்...

**அதிபர் :** வியாபாரியார்... அலுத்துப் போச்சுதா...
நம்ம வீட்டுல **50** இன்ச் **T V** இருக்குது...
நான் ஒரு ரவுன் போய்ட்டு உங்கட மீனை வித்துக்கிட்டு வாறன்...
அது வரைக்கும் நீங்க என்ர வீட்டுக்கு போய் **T V** யை பாக்குறீங்களா...
அதிபரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு

**மீன் வியாபாரி :** (சொன்னார்...)
பகுடி பண்ணாமா சும்மா போங்க சேர்...
**நான் அடுத்த தெருவில இருக்கிற சொப்ட் வெயார் என்சினியர்...என்றார் அசல் மீன் வியாபாரி இப்ப என்ர வீட்டுல T V பாத்துக்கிட்டு இருக்கார்...**

## சைனா காரனுக்கு இலங்கை கொடுத்த ஒப்பந்தம்

ஜோ பைடன் வெள்ளை மாளிகைக்கு வர்ணம் தீட்ட விரும்புகிறார்...

அவர் கோட்டேசனை கேட்கின்றார்... சைனா 3 மில்லியன் கோட்டேசனும் ஐரோப்பியா 7 மில்லியன் கோட்டேசனும் இலங்கை 10 மில்லியன் கோட்டேசனும் கொடுத்தார்கள்.
பைடன் சீனரிடம் கேட்டார் .. ".. எப்படி 3 மில்லியன் கோட்டேசனும காட்டினீர்கள் ..?" சைனா பதிலளித்தது ... "1 மில்லியன் வண்ணப்பூச்சுக்கு 1 மில்லியன் உழைப்புக்கு 1 மில்லியன் லாபம் ..."
பைடன் ஐரோப்பியரிடம் கேட்டார் ... அவர் பதிலளித்தார்- "... 3 மில்லியன் பெயிண்ட் 2 மில்லியன் உழைப்புக்கு 2 மில்லியன் லாபம் ..."

பைடன் இலங்கையிடம் கேட்டார் ... அவர் பதிலளித்தார் ... உங்களுக்காக 4 மில்லியன்... எனக்கு 3 மில்லியன் ... மேலும் **நாங்கள் சைனாவிற்கு 3 மில்லியனைக் கொடுத்து வண்ணம் தீட்டச் சொல்வோம் .. !! " இலங்கைக்கு ஒப்பந்தம் கிடைத்தது!**

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/

# முதலீடு செய்வதற்கான பல்வேறு வழிகள் இருந்தும் முதலீட்டாளர்கள்

# சேமிப்பில் மட்டுமே அதிக நாட்டம் கொள்கின்றனர்





**Rj Arivu**
BBB (Hons)Spl In Finance
University of Jaffna.

எம்முடைய வாழ்க்கை என்பது பல்வேறுப் பட்ட பிணைப்புகளில் பிணைந்துள்ளன. ஒவ்வொரு பொருளியல் ரீதியான தாக்கமும் எம்மீது பாரிய மாற்றத்தினை ஏற்படுத்து வதாக அமைந்துவிடுகின்றது. விடியும் ஒவ் வொரு நாளையும் ஏதோ ஒரு விதத்தில் பயனுள்ளதாகவும் பயனற்றதாகவும் அமைத்து பயணித்துக்கொண்டிருக்கின்றோம். இவ்வாறு எதிர்ப்பாராத சூழ்நிலைகளில் எம்முடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உழைப்பை நம்பி ஒவ்வொரு நாளும் ஓடிக் கொண்டிருக்கின்றோம். எதிர்கால நிச்சய மற்றநிகழ்வுகளைநிறைவேற்றிக்கொள்வதற் காக சேமிப்பினை **(Savings)** அடிப்படையாக கொண்டு செயற்படுவதனை காண்கின் றோம். தம்முடைய உழைப்பின் மூலம் பெறும் வருமானத்தினை தம் தேவைக் காக செலவு செய்து மீதியினை சேமிப்பதற் காக பயன்படுத்துகின்றோம். சிலரது வரு மானம் செலவிற்கு மட்டுமே என்ற மனநி லையையும் இருப்பதையும் காண்கின்றோம்.

எம்முடைய பொருளாதாரத்தில் அதிக பணபலம் படைத்த செல்வந்தர்களாயினும் சரி,

வருமானம் குறைந்த நடுத்தர வர்க்கத்தின ராயினும் சரி, அதி குறைந்த வருமானம் உழைக்கும் வர்க்கத்தினராயினும் சரி யாவரும் தாம் வருமானத்தின் ஒரு பகுதியை சேமிப்பதற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். இவர்களின் பார்வையில் முதலீட்டிற்கான ஒரே வழி சேமிப்பு **(Savings)** என்பது மட்டும் தான். முதலீடு செய்வதற்கான பல்வேறு வழிகளும் பல்வேறு முதலீட்டு சாதனங்கள் இருந்தும் சேமிப்பு எனும் சாதனத்தின் மூலம் மட்டுமே வருமானத்தை அதிகரிக்க எத்த ணிக்கின்றனர்.

வணிக வங்கிகளும் நிதி நிறுவனங் களும் வாடிக்கையாளரின் சேமிப்பு வைப் பிற்காக வழங்கும் வட்டி வீதம் 0.20-7.50 ஆகும். மற்றும் நிலையான வைப்பு களுக்கு **(Fixed Deposits)** வழங்கும் வட்டி வீதம் 3.55 - 15 ஆகும். எனவே சேமிப்பு முதலீட்டினை மட்டும் அடிப்படையாக கொண்டு

www.silampu.com

செயற்படும் பெரும்பாலான முதலீட்டாளர் களின் வருமானம் என்பது மேலே குறிப் பிட்ட வீதத்தின் எல்லைக்குள்ளே குறுகிய தாக காணப்படும்.

முதலீட்டின் மூலம் வருமா னத்தை அதிகரிக்க முதலீட்டாளர்களின் நிதி யினை பல்வேறு வழிகளில் முதலிட முடியும். அவ்வாறான முதலீட்டு வழிகள் திறை சேரி உண்டியல்கள் **(Treasury Bills)**, திறை சேரி முறிகள் **(Treasury Bonds)**, தொகு திக் கடன்கள் **(Debentures)**, வணிகப்பத் திரங்கள் **(Commericial Paper)**, பங் குச்சந்தை முதலீடு **(Share Market Investment)**, மனை வியா-பாரம் **(Real Esate Business)**, வியா-பாரமொன்றை ஆரம்பித்தல், பரஸ்பர நிதி முதலீடு **(Mutual Funds)** மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் சேமிப்பை பேணுதல் **(Saving Of Foregin (Unencles))**. முதலீட்டின் முலம் வருமானத்தை அதிகரிக்க செய்யவும் செல்வத்தை உயர்த்திக் கொள்ள வும் சேமிப்பு **(Savings)** முதலீட்டை தாண்டி ஏனைய முதலீட்டு சாதனங்களிலும் முதலிடு வதே செல்வத் தை அதிகரித் துக் கொள்வதற் கான வழி முறையாகும். அதிகளவிலான நிதியினை கொண்டிருக்கும் பெரும்பால-ான முதலீட்டாளர்கள் சேமிப்பு **(Savings)** தவிர்ந்த ஏனைய முதலீட்டு சாதனங்களில் முதலீடு செய்ய முற்பட்டமைக்கான காரணம் பணத் தோல்வி தொடர்பான பயமாகும் (Fear Of Losing Money). இலங்கை பொருளாதாரத்தை பொறுத்த வரையில் சேமிப்பிற்கு வழங்கும் வட்டி வீதத்தை விட உயர்வானதொரு வட்டி வீதமே ஏனைய முதலீட்டு சாதனங்களுக்கு கிடைக்கிறது. முதலீட்டாளர்களை பொறுத்த வரையில் அரச கடன் பத்திரங்களான திறைசேரி உண்டி யல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் முத லீடு செய்து **100%** ஆபத்து குறைவானது.



அதேபோல் சேமிப்பு வழங்கும் வட்டி வீதத்தை விட உயர்வானதோடு வட்டி வீத மே அரச கடன் பத்திரங்களில் கிடைக்க கூடியதாக உள்ளது. அரசானது தனது நிதி தேவையினை நிறைவு செய்து கொள்வ தற் காக மத்திய வங்கி மூலம் அச்சிட்டு வழங் கப்படும் ஆவணங்களே இவையா கும். திறை சேரி உண்டியல்கள் முதலாந்தர சந்தை **(Primary Market)** மற்றும் இரண் டாம் தர சந்தை **(Secondary Market)** மூலம் முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்து கொள்ள முடியும். இவை மூன்று, ஆறு மற்றும் 12 மாத முதிர்வு காலத்தை கொண்ட தாக அமையும். திறைசேரி உண்டியல் களில் முதலிடும் போது எமது செல்வத் தினை மேலும் உயர்த்திக்கொள்ள முடியும்.

இலங்கை பொருளாதாரத்தை பொறுத்த மட்டில் திறைசேரி உண்டியல்களுக்கு முத லார்ந்த சந்தையில் வழங்கும் வட்டி வீதமாக 03 மாத திறைசேரி உண்டியல்களுக்கு **7.51%** மும் ஆறு மாத திறைசேரி உண்டி யல்களுக்கு 8.02% மும் ஒரு வருட கால முதிர்வுடைய உண்டியல்களுக்கு **8.45%** மும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு இருக்க இரண்டாந்தர சந்தையில் திறைசேரி உண்டி யல்களின் முதலீட்டிற்காக மூன்று மாத திறைச் சேரி உண்டியல்களுக்கு **7.52%**

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/

மும் ஆறு மாத திறைச்சேரி உண்டியல் களுக்கு **8.36%** வட்டியும் வழங்கப்படுகின் றன.

சேமிப்பை விட அதிக வருமானத்தை உழைத்துக்கொள்ள எத்தணிக்கும் முதலீட்டா ளர்கள் திறைசேரி உண்டியல்களில் முதலிட முடியும். திறைசேரி உண்டியல்களை போன்றே திறைசேரி முறிகளும் முதலீட் டாளர்களின் செல்வத்தினை உயர்த்திக் கொள்வதற்கான ஓர் வழியாகும். திறை சேரி முறிகள் 02-05 வருடம் மற்றும் 10, 20 வருட கால முதிர்வினை கொண்டதாக அமை யும். நிலையான வட்டி வீதத்திை-னயும் நெகிடும் வட்டி வீதத்தையும் அடிப்பை-டயாக கொண்டு வருமானத்தை உழைத்துக்

முதலீட்டு சாதனம் தொகுதிக்கடன்கள் முத லீட்டாகும். வியாபாரம் மற்றும் தொழில் நிறுவனங்கள் தமது நிதித் தேவை யினை பூர்த்தி செய்யும் முகமாக பொதுமக்கள் மற்றும் நிதி நிறு வனங்களை நாடிச் செல்கின்றனர். இவ் வாறு வியாபாரம் மற்றும் தொழில் நிறு வனங்கள் தமது நிதி தேவையினை பூர்த்தி செய் து கொள்வதற்காக அச்சிட்டு வழங்கும் ஆவணங்களே தொகுதிக்ககடன் பத்திரங் களாகும். சேமிப்பிற்கு வழங்கும் வட்டி வீதத் தினை விட உயர்வானதொரு வட்டி வீதமே தொகுதிக்கடன் பத்திரங்களுக்கு வழங்கப் படும். இலங்கை பொருளாதாரத்தை பொறுத்த மட்டில் வியாபாரம் மற்றும் தொழில் நிறு வனங்கள்,

**திறைச்சேரி முறிகளுக்கான முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைக்கான வட்டி வீதம். [மத்திய வங்கியின் 2019 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கி ஆண்டறிக்கையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது.]**

| முறிகளின் முதிர்வு காலம் (வருடம்) | முதலார்ந்த சந்தை % | இரண்டாந்தர சந்தை % |
|---|---|---|
| 2 | 9.79 | 8.60 |
| 3 | 9.65 | 9.08 |
| 4 | - | 9.46 |
| 5 | 9.87 | 9.67 |
| 10 | 10.23 | 10.05 |

கொள்ள முடியும். அரசினால் வழங்கப்படும் இவ்வாறான கடன் பத திரங்களை முதிர்வு காலத் தின் முன் பணமாக்க வேண்டின் பண மாக்க முடியும். இந்த சந்தர்ப்பத் தில் மூலதன இலாபம் அல்லது மூலதன நட்டம் அடையக் கூடியவாய்ப்புஉள்ளது. எனினும்இவ்வாறான முதலீடு சாதனங்கள் பற்றிய முழுமையான அறிவினை பெற்று முதலிடுவது மேலும் சிறந்ததாகும்.

சேமிப்பு மட்டுமே வருமானத்தை உழைத்து தரக்கூடிய ஒரே சாதனம் என குறுகிய மனநி லையில் காணப்படக்கூடிய முதலிட்டா-ளர்கள் தம்முடைய வருமானத்தை உயர்த்தி கொள்ள பயன்படுத்தக்கூடிய மற்றுமொரு

வழங்கும் தொகுதிக்கடன் பத்திரங்களு-க்கு வழங்கும் வட்டி வீதம் 12.30 - 15.50 ஆகும்.

முதலீட்டாளர்கள் தம்முடைய நிதியினை பன்மடங்காக அதிகரிக்க தொகுதிக்கடன் பத் திர முதலீடு சாதகமாய் அமையும். இருப்பினும் இது தொடர்பான முழுமையான அறிவினை பெறறு முதலிடுவது முதலீட்டுக்கு சாதகமாய் அமையும். பங்கு சந்தை முதலீடு என்பது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற் கான மற்றுமொரு வழி முறையாகும். பங்கு சந்தை முதலீடு சேமிப்பு போன்றே வரு மானத்தை உயர்த்திக் கொள்வதற்கான சிறந்த தோர் முதலீட்டு சாதனமாகும். பங்கு

www.silampu.com

சந்தையில் பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் பங்குலாபம் மற்றும் மூலதன இலாபத்தினை உழைத்துக்கொள்ள முடியும். அதேவேளை மூலதன நட்டம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளின் பங்குகளை தரகர் மூலம் கொள்வனவு செய்வதன் மூலம் பங்குச் சந்தை முதலீட்டில் ஈடுபட முடியும். பங்குச் சந்தை முதலீட்டில் அதிக வருமானம் மட்டுமல்ல முதலீட்டுழப்பிற்கான **(Risk)** சாத்தியமும் அதிகளவு காணப்படுவதனால் பங்குச்சந்தையில் முதலிடுவதற்கு முன்பு தெளிவான விளக் கம் பெற வேண்டும். குறித்த நிறுவனமொன் றின் பங்குகளை கொள்வனவு செய்ய வேண்டுமென்றால் முதலில் அந்நிறுவனத்தின் நிதி நிலைமையை **(Balance Sheet)** ஆராய வேண்டுமென்று உலக பணக்கார வரிசையில் நான்காம் இடத்தில் உள்ள வாரன் ஃபபரட் **(Warren Buffett)** குறிப்பிட்டுள்ளார்.

முதலிட்டாளர்களின் நிதியினை பன்முகப்படுத்தும் செயற்பாடு பரஸ்பர நிதி **(Mutual Fund)** ஆகும். முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் முதலிட்டமைக்கான காரணம் வேலைப்பழுவாகும்.

தொடர்ச்சியாக பங்குச் சந்தையினை அவதானிக்க முடியாது. முதலீட்டாளர்களின் மற்றுமொரு முதலீட்டு வாய்ப்பு பரஸ்பர நிதி **(Mutual Fund)** முதலீடாகும். முதலீட்டாளர்களிடம் இருந்து பெறப்படும் நிதி பல்வேறு வழிகளில் முதலிடப்படுகின்றது. உதாரணமாக பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிதியினை பங்குச்சந்தை, பணச்சந்தை மற்றும் ஏனைய முதலீட்டு சாதனங்களில் முதலீடு செய்து கிடைக்கும் வருமானத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின் றது. இதனூடாக முதலீட்டாளர்கள் தம்முடைய செல்வத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

இன்றைய நடைமுறை உலகில் சில முதலீட்டாளர்கள் மனை வியாபாரத்தில் **(Real Estate Business)** ஆர்வம் கொள்வதனை காணக்கூடியதாக உள்ளது. இருப்பினும் பெரும்பாலான முதலீட்டாளர்கள், தன் மீது முதலிட ஆர்வம் கொள்வதில்லை. முன்னர் கூறியதைப் போன்றே பணத்தோல்வி தொடர்பான அச்சமே **(Fear Of Losing Money)** இதற்கு பிரதானமான காரணமாகும். நடைமுறை உலகில் முதலீட்டாளர்கள் பொறுப்பினை(Liability) கொள்வதே செய்ய தயாராக உள்ளனர்.

சொத்துக்களை **(Asset)**




www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/




கொள்வனவு செய்ய முயற்சிப்பதே இல்லை. உலக பணக்கார வரிசையில் பெரும்பாளான முதலீட்டா ளர்களின் முதலீட்டில் மனை வியாபாரம் **(Real Estate Business)** ஓர் அங்கமாக இருந்து வருகிறது. மனை வியா-பாரம் பற்றிய முழுமையான அறிவினை கொண்டு முதலி டும் போது எம் செல்வம் மேலும் உயரும்.

மேலும் குறிப்பிடும் பொழுது முதலீட்டா ளர்களின் முதலீட்டை மேலும் அதிகரிக்க வெளிநாட்டு நாணயங் களில் வைப்புக்களை பேண முடியும். இதன் மூலம் அதிகளவான வருமானத்தை உழைத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். உதாரணமாக இலங்கை நாட்டு பிரஜை ஒருவர் தம்முடைய வைப்பினை டொலர் **($)** , யூரோ(€), **Yen(¥)** போன்ற வெளிநாட்டு நாணயங்களில் பேண முடியும்.

பொருளாதாரத்தில் வெளிநாட்டு நாண ய மாற்று வீதத்தின் அடிப்படையில் வரு மானம் நிர்ணயிக்கப்படும். சில அசாதாரண சூழ்நிலையில் பொருளாதாரத்தில் ஏற்படும் தளம்பல் காரணமாக நட்டம் ஏற்படக் கூடிய வாய்ப்புகளும் உண்டு. தொடர்ச்சியான நாணயமாற்று வீதத்தினை அவதானிப்பதன் மூலம் இவ்வாறான நட்டத்தினை குறைத்துக் கொள்ள முடியும்.

பல்வேறு முதலீட்டு சாதனங்களில் முத லிடுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் பணத் தோல்வி **(Fear Of Losing Money)** தொடர்பான அச்சம் காரணமாக பல்வேறு முதலிட்டாளர்கள் சேமிப்பு தவிர்ந்த ஏனைய முதலீட்டு சாதனங்களில் முதலிடுவதற்கு தயங்குகின்றார்கள்.

முதலிட்டாளர்களின் வருமானத்தை பல் வேறு வழிகளில் விரிவாக்கி கொள்ள பல் வேறுப்பட்ட முதலீட்டு சாதனங்களில் முத லிடமுடியும். அனுபவம் வாய்ந்த முதலிட்டாளர் களின் ஆலோசனைகளை கோருவதன் மூலம் பல்வேறுப்பட்ட தகவல்களை அறி வதன் மூலம் பணத்தோல்வி தொடர்பான அச்சத் தினை நீக்கி முதலீட்டராகிய நீங்களும் உங்களுடைய நிதியினை பல்வேறுப்பட்ட முதலீட்டு சாதனங்களில் முதலிட்டு உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள முடி யும்.

www.silampu.com



## கவிதை பூங்கா

# தாமரையே! நீ மலரும் நேரம் ஏதோ?

தண்ணீரில் ஆடிடும் தாமரையே –நீ
தரணியில் மலர்ந்திடும் நேரம் ஏதோ?
விண்ணிலே தோன்றிடும் வட்டத்தட்டு
வீசிடும் கதிர்கள் படும் நொடியோ?

சேவல் கூவிடும் ஒலி கேட்டோ?
சேர்ந்திட்ட உன் இதழ்கள் விரிகின்றன
சேரி மாந்தரின் விடியல் கேட்டோ?
சேற்றினில் மலர்ந்தும் சிரிக்கின்றாய்

குருவியும் காகமும் கதைக்கும் சத்தம்
கும்பிடும் உன்னைக் குழப்பியதாலோ
கரங்கள் கூப்பிய நிலை தளர்ந்து
கமழ் மலரென மலர்கின்றாய்

காரிருள் விலகிடும் நேரம் என்ற
களிப்பினிலோ? இதழ்கள் சிரிக்கின்றன–நீ
விரிந்திடும் நொடியினை ரசித்திடவேயெனை
விலங்கிட்டு வைத்துக்கொள் உன்னருகில்

-சிரபுரத்தான், மண்டைதீவு.

# ரோமியோ ஜூலியட் காதல்...

பெருந்துயர் காதலோடு
காற்றில் தனித்த இலையாக
மிதந்தலைந்துகொண்டிருந்தேன்...

இதோ வருகிறேன்
இளைப்பாறு என – என்
உடைவாளால் உயிர்நீத்து
கரம்பற்றி அழைத்துச் செல்ல
நீ வந்தாய் மண்ணகம் விடுத்து....

நிம்மதியாய் ஜீவன் இரண்டும்
ஆசுவாசமாக காதலின் தோளயர்கிறது
வற்றாத ஜீவ ஊற்றாய்....

உயிர்மேல் உயிர் தழுவி
உடல்களை இழந்த காதல்
ஒரு கையால் தலைகோதி
மறுகையால் தட்டிக்கொடுக்க
தவம் செய்து கொண்டிருக்கிறது
விருப்பத்தின் நிதானத்தை...
பூமியில் காதலர்களுக்காய்....

காதலில் கொஞ்சம்
காதலோடு கொஞ்சமாய்
வாழ்பவர்களைக் காண்பீர்களெனில்
எங்கள் ஞாபகத்தைக் கொஞ்சம்
கையில் கொடுங்கள்...
ரோமியோ ஜீலியட் காதல் பரிசென..

அன்புடன்
**சங்கரி சிவகணேசன்**
புத்தூர், யாழ்ப்பாணம்

www.silampu.com/magazine/
www.silampu.com

www.silampu.com/magazine/




## "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"

**உலகமெங்கும் பரந்து வாழும் தமிழ் வாசிப்பு பிரியர்களே!.**

உங்கள் அபிமான சிலம்பு பல்சுவை இணைய இதழும் உலக மெங்கும் பரந்து வாழும் தொல் தமிழின் குழந்தை களோடு குலவி மகிழ வருகிறது.

இதன் அவயவங்கள் அனைத்தும் பிர யோசனமான விடயங்களையே தாங்கி யுள்ளன. இவ் இணைய இதழ் மூலம் பயனுள்ள தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

வாசிப்பை நேசிக்கும் நெஞ்சங்கள் தமது ஓய்வு நேரங்களை பயனுளதாக்க சிலம் பின் இதழையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

இது எமது குழாத்தின் அருங் குழந்தை. ஆதலால் இக் குழந்தையை தமிழ் சமு தாயத்திற்கு உகந்த நல்ல குழந்தையாக வளர்த்தெடுப்பதற்கு தங்களால் தரப்படும் பின்னூட்டங்கள் பயனுள்ளதாகும்.

ஆதலால் தங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் எம்மோடு பகிர் வது எம் பாதையை செப்பனிடும். தயங்கா தீர்கள். உங்களிடம் இருந்து நாம் எதிர் பார்ப்பதெல்லாம் உங்களது பெறுமதி யான வரவேற்பும் ஆதரவுகளுமே.

வாசிப்பதோடு மட்டும் நின்று விடாமல் உங்களுக்குள் ஒளிந்து வாழும் எழுத் தாளனை, கவிஞனை, கதாசிரியனை "சிலம்பு" மூலம் வெளிக்கொணருங் கள். நிச்சயம் துணை நிற்போம். அத்து டன் வர்த்தக வணிக விளம்பரங்களை பிர சுரிக்க மறவாதீர்கள். இறையருளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

**நன்றிகளுடன்.**
**சிலம்பு இணைய இதழ் குழுமம்.**

தொடர்புகளுக்கு -
076 538 3995

இவ் இதழானது 2021.05.28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, "சிலம்பு" பல்சுவை இணைய இதழாக அருள்ஒளி கிரியேசன்ஸ் பிறைவேட் லிமிரெட் நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது.

www.silampu.com